சென்னை வியாபாரி

என்கிற

தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
5 - JAN 1914

புஸ்தகம் 1.
Vol. 1.
பிரமாதீச ௵ மார்கழி ௴ 9௳ — 1913 ௵ டிஸம்பர் ௴ 23௳
ஸஞ்சிகை 8.
No. 8.

H. E. THE VICEROY'S REPLY.

மேன்மைதங்கிய வைசிராய் சொன்ன பதில்.

———

சென்ற மாத "சென்னை வியாபாரியில்" மேன்மை தங்கிய வைசிராய் அவர்களுக்கு சென்னை மாகாண சுதேச வர்த்தக வகுப்பார் தரப்பில் தென் இந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்கிற வர்த்தக சபையார் வாசித்த அட்டிரசின் சாராம்சத்தை எடுத்தெழுதி யிருந்தது நம் நேயர்களுக்கு ஞாபகமிருக்குமென்று நம்புகிறோம். இம்மாதச் சஞ்சிகையில் மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் சொன்ன பதிலை எடுத்தெழுதக் கடமைப்பட்டிருக்கிறோம். இக்கடமையை நிறைவேற்றுவதற்கு முந்தி சென்னை மாகாண ஐரோப்பிய வர்த்தகர்கள் தரப்பில் சென்னைச் சேம்பர் ஆப் காமர்ஸ் என்கிற வர்த்தக சபையாரும் மேன்மை தங்கிய லார்ட் ஹார்டின்ஞ் அவர்களுக்கு வாசித்த அட்டிரசில் கண்ட பொருளை எடுத்தெழுதவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏனெனில் கனம்பொருந்திய வைசிராய் இரு வர்த்தக வகுப்பாருக்கும் சேர்த்து பதில் கூறினார்கள். சென்னைச் சேம்பர் ஆப் காமர்ஸ் சபையார் அட்டிரசில் காணப்பட்டிருந்த விஷயங்கள் என்னவென்றால், சென்னைத் துறைமுக சம்பந்தமான வியாபாரம் சில வருடங்களாக உறுதியாய் சுபிக்ஷமாயிருந்துகொண்டு வருகின்றதென்றும் இதற்குக் காரணம் என்னவென்றால் போர்ட்டிரஸ்ட் சேர்மேன் சர். பிரானன்சிஸ் ஸ்பிரிங் அவர்களின் மேற்பார்வையில் துறைமுகதில் செய்யப்பட்டிருக்கும் விருத்தியே என்றும் போர்ட்டிரஸ்ட் கமிட்டியார் அப்போதப்போது செய்த ஏற்பாடுகளை கவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்துவந்ததற்காக வந்தனம்செய்ய சேம்பர் கடமைப்பட்டிருக்கிறதென்றும் கவர்ன்மெண்டார் உதவிசெய்த பணம் எவ்வளவு நன்மையானவும் அனுகூலமான விஷயங்களில் பிரயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறனவென்று துறைமுகத்தைப்பார்த்தமாத்திரத்தில் அறிந்து கொள்ளக்கூடுமென்றும் சென்னைத் துறைமுகத்தில் பிரயாணிகளையும் சரக்குகளையும் ஏற்றவும் இறக்கவும் போதுமான வசதியில்லை என்கிற காரணத்தை முன்னிட்டு துறைமுகத்தை எட்டிப்பார்க்காத ஸ்டீமர்கள் எல்லாம் இத் துறைமுகத்துக்கு வந்துபோக ஆரம்பித்துவிட்டனவென்றும் உதாரணமாக "கலிடோனியா" என்கிற ஸ்டீமர் மத்தியானம்

1மணிக்கு துறைமுகத்திற்குள்வந்து $2\frac{1}{2}$ மணி நேர காலத்தில் 171 பிரயாணிகளை இறக்கி விட்டு பிரயாணமாய்விட்டதென்றும் இவ்வளவு சௌகரியம் வேறெந்த துறைமுகத்தில் கிடைக்கமாட்டாதென்றும் இதேமாதிரியாகசரக்குகளை ஏற்றவும் இறக்கவும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் ஆதலால் 1912-ம்வூத்திய ஏற்றுமதி வியாபாரமும் இறக்குமதி வியாபாரமும் விசேஷமாக நடந்துவந்திருக்கிறதென்றும் அறிவித்துக்கொண்டார்கள். இதன்பிறகு கரையோரத் துறைமுகங்களைப்பற்றி பேசிப் கூடலூர், பறங்கிப்பேட்டை, நாகப்பட்டணம் முதலிய விடங்களிலிருந்து ஐரோப்பாவிற்கு மணிலாக்கொட்டை விசேஷமாகஏற்றுமதியாகி வருகிறதென்றும் ஆனல் இந்த துறைமுகங்களில் சரக்கை கிட்டங்கிகளிலிருந்துஸ்டீமருக்குக்கொண்டுபோகும்போது அவைகள் களவாடப்பட்டு வியாபாரிகள் நஷ்டமடைந்து வருகிறார்கள் என்றும், திருடினவனைப் பிராக்கியூட் செய்யலாமென்றாலோ மணிலாக்கொட்டைதிருடினவனுடைய சொந்தமானதல்ல ஆனல் திருட்டுச் சொத்தென்று அடையாளங்கண்டு பிடித்து த்து ருஜூப்படுத்துவது சாத்தியமான காரியமில்லை என்றும், ஆதலால் ரேவுதுறைக்குள் திருட்டுப் போனல் திருடப்பட்ட சொத்து யாரிடமிருக்கிறதோ அவன் அச் சொத்து தன்னுடைய தென்று ருஜூப்படுத்தும்படியாக சட்டம் சீர்திருத்தப்பட்டால் இவ் வர்த்தகர்களுக்கு அனுகூலமா யிருக்குமென்று சொல்லிக் கொண்டார்கள். இதன் பிறகு நாணய கமிஷனைப்பற்றி பேசி இந்த கமிட்டியார் செய்யும் முடிவுகளும் சிபார்சுகளும் ஆவலுடன் எதிர்பார்க்கப் படுகிறதென்றும் சரக்குகளை வாங்க வேண்டிய பருவ காலத்தில் பணம் அகப்படாமல் வியாபாரிகள் தவிக்கும்போது கவர்ன்மெண்டார் முன்வந்து உதவி செய்யாமல் கஜானக்களில் பணத்தைக் முடக்கிப் போட்டுக் கொண்டிருப்பதை இந்த கமிஷன் கவனித்து தக்கபடி சிபார்சு செய்யுமென்று எதிர்பார்க்கப் படுகிறதென்றும் தெரிவித்துக் கொண்டார்கள். இந்த விஷயம் முடிந்த பின் இருப்புப்பாதைகளைப் பற்றிப் பேசி இந்த ராஜதானியின் சில ஜில்லாக்களில் ரயில் போட்டு அவைகளைப் பலப்படுத்த வேண்டிய தவசியமாக யிருக்கிறபடியால் ஏற்கனவே சர்வே செய்யப்பட்டிருக்கும் மார்க்கங்களைப் போட்டு முடிவுசெய்யும்படியாக கவர்ன்மெண்டார் அனுதாபம் காட்டி சாங்கிஷன் செய்து முடித்துவைக்க வேணுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

இவ்விரண்டு அட்டிரசுகளுக்கும் மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் சொன்னபதில் என்னவெனில் சென்னைத் துறைமுகத்தைப் பற்றிப் பேசி கவர்ன்மெண்டார் ஏற்கனவே கொடுத்த ரூ. 20 லக்ஷமும், கடன்களுமல்லாமல் கடந்த மார்ச்சுமீ ம் ரூ. 5) லக்ஷம் கடன் சாங்கிஷன் செய்யப்பட்டது. இந்தத் தொகைகளைக் கொண்டு போர்ட்டிரஸ்ட் சேர்மேன் சர் பிரான்சிஸ்சின் மேல் பார்வையின்பேரில் செய்யப்பட்டிருக்கும் விருத்தி வேலைகள் திருப்திகரமாயிருக்கின்றன வென்றும் இப்போது செய்யப்பட்டிருக்கும் வசதிகளால் இத்துறைமுகம் மேலும் மேலும் எல்லோராலும் விரும்பப்படுமென்று சொன்னர்கள்.

வியாபாரவிருத்தியைப் பற்றிப் பேசி கடந்த 5 வருடத்தில் சமுத்திர மூலியமாக அன்னிய தேச வியாபாரமும் கடற்கரை யோரமுள்ள துறைமுகங்கள் வியாபாரமும் சேர்ந்து 45 கோடி ரூபாய்க்கு நடந்திருக்கிறபோது சென்ற வருடத்தில் மட்டிலும் 54 கோடி ரூபாய் வியாபாரம் நடந்திருக்கிற தெனறும் அதில் என்ன ஆச்சரியமென்றால் இந்த 54 கோடியில் சென்னைத் துறைமுகத்தில் மட்டிலும் 21 கோடி ரூபாய்க்கு நடந்திருக்கிறதால் தாம் சந்தோ

ஷப் படவேண்டியதாயிருக்கிறதென்றும் சொன்னார்கள்.

கடல் கரையோர துறைமுகங்களைப் பற்றி பேசி சரக்குகள் திருட்டுப்போவது விசனிக்கப்படக் கூடியதாயிருக்கிறதென்றும், ஆயினும் தகுந்தபடி போலிஸ் பந்தோபஸ்து வைத்துப் பரிக்ஷித்து அதனால் திருட்டு அடங்கவில்லை என்று தெரியும் பரியந்தம் சட்டத்தைத் திருத்தும்படி சம்மதிப்பது சாத்தியமான காரியமல்லவென்றும் சாக்கிநாடாவிலிருக்கும் "பெட்ரோல் லான்ச்" என்கிற பந்தோபஸ்து படகு இம்மாதிரி திருட்டுக்களை அடக்கிப்போடுமென்றும், அதில் ஏதோ ஊனம் நேரிட்டிருக்கிறது போல் தோற்றுகிறதென்றும், அதை லோக்கல் கவர்ன்மெண்டார் சீக்கிரம் ரிப்பேர் செய்துவிடுவார்கள் என்று தாம் நம்புவதாயும் சொன்னார்கள்.

கைத்தொழில் இலாகா ஒன்று இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் இப்போது அது பரிக்ஷார்த்தமாக ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் போகப்போக இதன் வேலைகள் இம்மாகாணத்தில் மட்டிலுமல்லாமல் மற்ற எல்லா மாகாணத்திலும் கவனிக்கப்பட்டு வரும் என்றும் சொன்னார்கள்.

நாணயக் கமிஷனைப்பற்றிப் பேசி இக்கமிஷன் செய்யும் சிபார்சுகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாயும் வர்த்தகர்களுக்கு பணக்கசாலா உண்டான காலத்தில் பிரசிடென்சிபாங்க் மூலியமாகசில நிபந்தனைகள் பேரிலும் பாங்கி வட்டிக்கு 100-க்கு 1 குறைவாகவே வட்டிபோட்டுக்கொண்டு கடன் கொடுத்து உதவ ஏற்பாடு சில தினங்களுக்கு முந்திதான் செய்யப்பட்டிருக்கிறதென்றும் இந்தியா மந்திரி இந்திய வர்த்தக விஷயமாகவே ஏதேஷ்டமான பணம் அடிக்கடி வாங்கிக் கொள்ளுகிறபடியால் முன்போல இந்தியா கவர்ன்மெண்டு கையிருப்பில் அதிகப்பணம் தங்க மார்க்கமில்லை என்று சொல்லிவிட்டு. பாங்க் முறிவுகளைப்பற்றி பேசி தேசத்தின் வியாபாரம் முடைக்கு வர்த்தகர்களுக்கு கடன் கொடுத்து உதவி செய்யும்படியாக ஏற்பாடு செய்துவிட்டபடியால் இனி வியாபாரத்திற்கு யாதொரு இடைஞ்சல் உண்டாகமாட்டாதென்று எண்ணப்பட்டதென்றும் ஆனால் துர் அதிர்ஷ்டத்தின் வசம் அகப்பட்டு இப்போது கஷ்டமடைந்து வருகிறதென்றும் பஞ்சாபில் பாங்கிகள் முறிய ஆரம்பித்து வட இந்தியாவிற்குப் பரவினதென்றும் பம்பாயிலும் அனேக பாங்கிகள் முறிந்துபோய் கனத்த பணக்கஷ்டம் உண்டாயிருக்கிறதென்று இந்த சமயத்தில் கவர்ன்மெண்டார் உபேக்ஷையாயிருக்கவில்லை என்றும் சம்பவங்களை மிகவும் கவனித்து செய்யவேண்டிய உதவிகளைச்செய்து வருகிறார்கள் என்றும் சொன்னார். இந்திய பாங்கிகள் இப்படி முறிந்து போய்விட்டபடியால் ஜனங்களுக்குள் அவநம்பிக்கை உண்டாகி இனி தங்களுடைய சம்பார்த்தனைகளையும் மீதப்பட்ட பணங்களையும் பாங்கிகளிலும் கைத்தொழில் முயற்சிகளிலும் போட்டுமுடக்க பயப்படுவார்கள் என்றும் அப்படி பயப்படக் கூடாதென்றும் இப்போது நடந்திருக்கும் சம்பவங்கள் இனிவருங்கால் எச்சரிக்கையாக எண்ணப்பட்டு ஜனங்கள் தங்களுடைய சம்பார்த்தனைகளை நல்ல பாங்கிகளையும் முயற்சிகளையும் தெரிந்துகொண்டு அவைகளில் போட்டுமுடக்க வேண்டுமேயொழிய பாங்கிகளிலும் முயற்சிகளிலும் போட்டுமுடக்குவதை நிறுத்திப்போடக் கூடாதென்றும் இப்படி பணம் இவைகளில் போட்டுமுடக்கப்படுவது தேச க்ஷேமத்தை விளைவிக்க கூடியதென்றும் சொன்னார்; முடிவில் கிளை இருப்புப்பாதைகளைப் பற்றிப் பேசினார். அனேக வருடகாலங்களாக இம்மாகா

ணத்திலுள்ள ஜில்லா போர்டுகளும் நிலச்சுவான்தார்களும் தங்களுடைய ஜில்லாக்களில் ரயில் போட பணம் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள் என்றும் ஆயினும், ரயில்போட்டு முடிவதற்கு முந்தி தேவையான முழுப் பணத்தைச் சேகரிக்க அவர்களால் சாத்தியப்படாமலிருக்கிறதென்றும், ஆயினும் இந்த கஷ்டம் இப்போது சென்னை கவர்ன்மெண்டாருடைய பிரயத்தனத்தால் விலகிப்போய்விட்டதென்றும் ஏன் எனில் மதிராஸ் பாங்கியார் ஜில்லா போர்ட்டு டிபன்சர்களை ஈடுவைத்துக் கொண்டு பணம் கொடுக்க சம்மதித்திருக்கிறார்கள் என்றும், இந்தப் பிரயத்தனத்தையன்றி சில அவுஸ்காரர்கள் தாங்களே ரயில்போடுவதாக முன்வந்திருக்கிறார்கள் என்றும் இந்தப் பிரரேபணைகளை லோக்கல் கவர்ன்மெண்டார் ஆதரிக்கும் விஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டாருடைய கவனத்தைப் பெறுமென்றும் ஆகவே இந்தியாவில் அகப்படும் மூலதனத்தைக்கொண்டே இனி இருப்புப்பாதைகளை போட்டுமுடிக்க மார்க்கமிருக்கிறதென்றும் சொல்லிமுடித்தார்கள்.

MADRAS NEW SHERIFF.

சென்னைக்கு புதிய ஷெரீப்.

திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் அவர்கள் அடுத்த வருடத்திற்கு இந்நகர் ஷெரிபாக (Sheriff) நம்முடைய கவர்ன்மெண்டார் தெரிந்தெடுத் திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு சந்தோஷமடைகின்றோம். இவர் சென்னை நகருக்குள் திரண்ட செல்வ சம்பத்துடையவர்களுக்குள் ஒருவர். குஜராத்தி வைசிய வகுப்பாரைச் சேர்ந்தவர். பொது நன்மைக்கான விஷயங்களில் மிகவும் பற்றுடையவர். மெசர்ஸ் சதுர்புஜதாஸ், குசால்தாஸ் அண்டு சன்ஸ் என்கிற கம்பெனியின் பிரதம பாகஸ்தர். இந்த கனவானுக்கு வயது 35-தான். இவ்வளவு பாலியத்தில் இதுவரையில் எவரும் சென்னை ஷெரிபாக நியமிக்கப் பட்டதில்லை. சென்னை மிருகவதை நிவாரண சங்க மதிராஸ் பன்ஜாரப்போல் முயற்சிகளிலும் மிகுந்த பற்றுடையவர். மதிராஸ பன்ஜரப்போலு (Madras Panjarapole)க்கு எதேஷ்டமான பெரிய நன்கொடைகள் அளித்திருக்கின்றனர். சென்னை ஆன்ஜு-மென் அர்பத்நட் பாங்க் முறிவால் பணத்தை இழந்து கஷ்டப்பட்டபோது அதற்கும் தாராளமான நன்கொடை கொடுத்திருக்கின்றனர். இந்நகரில் நடைபெற்றுவரும் பகவத்காலக்ஷேப சமாஜங்களும் சங்கீத சாலைகளும் இந்த கனம்பொருந்திய கனவானுடைய ஆதரிப்பைப் பெற்றிருக்கின்றன. கேட்டவர்களுக்கு இல்லை என்று சொல்லாது ஈயும் தாதா இவர் என்பதை எவரும் மறுக்கார். பிறகு, பிரஸ்தாப கனவான் இந்தியன் பாங்கிக்கு டைரக்டராக யிருந்து வருவதுமன்றி நம்முடைய தென்னிந்தியா வர்த்தக ஆலோசனை சபைக்கும (Southern India Chamber of Commerce) வைஸ் பிரஸிடெண்டாக யிருந்து வருகின்றனர். பெரிய செல்வ சம்பத்து படைத்தவரா யிருந்தபோதிலும் டம்பம், கர்வம் முதலிய தீய குணதிசயங்களற்றவரானபடியால் இந்நகரில் எல்லா வகுப்பினருடைய நன்கு மதிப்பைப் பெற்று கொண்டாடப்பட்டு வருகின்றனர். பொது ஜனங்கள் நன்கு மதிப்பதுபோல கவர்ன்மெண்டாரும் நன்கு மதித்து இவருக்கு 1907-ல் ராவ்பகதூர் 1911-ல் திவான்பகதூர் என்கிற பட்டங்களைச் சூட்டி கௌரவப்படுத்தி யிருக்கிறார்கள். நம்முடைய திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜ தாஸ் அவர்களுடைய உத்தரவின் பேரில் மாக்ஷிமைதங்கிய நம்முடைய சக்ரவர்த்தியாருடைய உருவச்சிலை ஒன்று சென்னையில் நிர்மாணிக்கப் படுவதற்காக இங்கிலாண்டில் தயார் செய்யப்பட்டு வருகிறதென்று நாம் சென்ற மாதம்பிரசுரமான 'சென்னை வியாபாரியில், எற்கனவே எடுத்துச்சொல்லி யிருப்பது நம் நேயர்களுக்கு ஞாபகமிருக்குமென்று நம்புகின்றோம்.

TRADE.
வியாபாரம்.

MADRAS HANDKERCHIEFS.
மதிராஸ் கைகுட்டைகள்

மதிராஸ் கைகுட்டைகளில் போடப்படும் சாயம் மட்டமாயும் உறுதியற்றதாயு மிருக்கிற தென்றும் ஆகவே அதற்குள்ள ஏற்றுமதி கிராக்கி குறைந்துபோகக் கூடியதா யிருக்கிறதென்றும் லோக்கல் கவர்ன்மெண்டாருக்கு அறிவித்துக் கொள்ளப்பட்டது. அதன்பேரில் இதைப்பற்றி விசாரணைசெய்து ரிப்போர்ட் செய்யும்படி நிபுணர் நியமிக்கப்பட்டனர். இவர் விசாரணைசெய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பிய ரிப்போர்ட் இப்போது பயிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் காணப்பட்டுள்ள முக்கிய விஷயங்களை இவ்விடத்தில் எடுத்தெழுதுகின்றோம்: —

மதிராஸ் கைகுட்டைகள் வெள்ளை நூலைக்கொண்டும் வர்ண நூலைக்கொண்டும் 8 கெஜ நீளத்திலும் 36 அங்குல அகலத்திலும் துண்டு துண்டாய் நெய்யப்படுகிற வெள்ளை, வர்ண நூல்களைக்கொண்டு நெய்யப்பட்டு வருகிறபடியால் விநோதமான செக்குபோலிருக்கிறது. இக்குட்டைகள் பெரும்பாலும் ஆரனியிலும் மதிராசுக்குவடக்கேயுள்ள கடப்பை நெல்லூர் முதலிய ஜில்லாக்களிலு தயார்செய்யப்படுகின்றன. "மட்டம்", "நடுத்தரம்", "உயர்ந்தது"—ஆக மூன்று தினுசுகளிருக்கின்றன. மட்டம் நடுத்தரச்சரக்குகளில் தான் மட்டச்சாயம் போடப்படுகிறதாக புகார் கிளம்பியிருக்கிறது.

பிரஸ்தாப கைக்குட்டைச் சரக்கு பெரும்பாலும் இங்கிலாண்டுக்கும் உபாயமாக சிலோனுக்கும், ஸ்டிரேயில் செட்டில்மெண்டு தீவாந்திரங்களுக்கும், பிரான்சுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. 1912-13 வருடமாகிய சென்ற வருடத்தில் மட்டிலும் ஏறக்குறைய 9 லக்ஷ ரூபாய்ச் சரக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப கைகுட்டைகளில் பிரயோகப்படுத்தப்பட்டு வரும் வர்ணங்களில்............கும் நீலி, மஞ்சளும், இவைகளின் கலப்பு போடும் ....உடனும் சேர்க்கப்பட்டும், பிரயோகப் படுத்தப்பட்டு வருகின்றன. மஞ்சளைத்தவிர மற்ற வர்ணங்கள் எல்லாம் சலவைக்கு உறுதியாக நிற்கின்றன.

மட்டச் சாயங்களை பிரயோகப்படுத்தி வருவதற்குக் காரணம் என்னவென்றால் இந்த சரக்கில் வியாபாரம் செய்துவரும் வியாபாரிகளிடம் கட்டுப்பாடில்லாததே. மட்டச் சாயம் போட்ட சரக்குகளை வர்த்தகர்கள் எல்லோரும் சேர்ந்து கட்டுப்பாடு செய்துகொண்டு வாங்குவதை நிறுத்திப்போட்டால் சாயம் போடுகிறவர்கள் அஞ்சி உயர்ந்த சாயம் போடுவார்கள். இப்படி வர்த்தகர்களுக்குள் ஒற்றுமையில்லாததை முன்னிட்டு, சாயக்காரர்கள் இஷ்டப்படி சாயத்தைப்போட்டு ஒரு வியாபாரி மட்டச் சாயம் என்று தள்ளிப்போட்டச் சரக்கை மற்றொரு வியாபாரியிடம் விற்பனை செய்து விடுகிறார்கள். எப்போது தள்ளுப்பட்ட சரக்குகளுக்கு கிராக்கியிருக்கிறதோ நல்ல சாயத்தைபோட்டே தீரவேண்டு மென்கிற பயம் சாயக்காரர்களுக்கில்லை என்பதை

நாம் எடுத்துச் சொல்லவா வேண்டும்? ஆகையால் மதிராஸ் கைகுட்டைகளுடைய யோக்கியதை குறைந்து போகாமலும் அதன் ஏற்றுமதியும் குறைந்து போகாமலுமிருக்கவேண்டுமானால் அச்சரக்கில் வியாபாரஞ்செய்யும் வர்த்தகர்கள் கட்டுப்பாடாயிருந்து மட்டச் சரக்குகளை தள்ளிப்போடவேண்டுமென்று ரிப்போர்ட் செய்யப்பட்டது.

இதன்பேரில் கவர்ன்மெண்டாரும் இந்த ரிப்போர்ட்டை அங்கிகரித்துக்கொண்டு கைக்குட்டைகளின் ஏற்றுமதி குறைந்து போகாமலிருக்கும்படி செய்யவேண்டிய பொறுப்பு முழுதிலும் வர்த்தகர்களைச் சேர்ந்ததென்று ரிமார்க் செய்திருக்கிறார்கள்.

Death of a Guzarati Philanthrophist.

ஒரு மானிடாபிமானியின் மரணம்.

மிஸ்டர் தாமோதரதாஸ் கோவர்த்தனதாஸ் பாரிசவாயு உபத்திரவத்தில் சிக்கி நான்கு தினம் நோயாயிருந்து லால் கேஷ்வரிலிருக்கும் அவருடைய கிரகத்தில் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகம் ஏகினார். இவர் குஜராத்தி வகுப்பினரைச்சேர்ந்தவர். இறந்து போகும்போது வயது இவருக்கு 64. இவர் ஒருபாரி பஞ்சு வியாபாரி. திரண்ட ஐவேஜி சம்பாதித்துச் சேர்த்தனர். இவர் தருமச்சித்தம் நிரம்பப் பெற்றவர். பல தருமங்களில் சொத்துக்களை வினியோகஞ் செய்துவந்தனர். பிரமசமாஜத்தின் கொள்கைகளை நம்பினவர். பிரதான சமாஜத்திலும் அங்கத்தினராயிருந்து ஷை சமாஜத்தின் கட்டடத்திற்காக ரூ. 20 ஆயிரம் நன்கொடை அளித்திருக்கின்றனர். இரண்டு வருடங்களுக்குமுந்தி கல்கத்தாவிலிருக்கும் ஒரு பிரமசமாஜம் பம்பாய் பிரமசமாஜாத்திற்கு பிரமோபாதிரிகள் அனுப்பி தெய்வ ஆராதனை நடத்திவைக்கும்படியாக லக்ஷரூபாய் ஷை சமாஜாத்திற்கு நன்கொடை கொடுத்தனர். ஆனால் கல்கத்தா சமாஜத்தார் அவருடைய எண்ணத்தை நிறைவேற்றிவைக்கவில்லை. அமெரிக்காமுதலிய அன்னியதேசங்களையும் போய்ப்பார்த்துவிட்டு வந்தனர். எங்கு பார்த்தாலும் லைப்ரேரிகள் (Libraries) ஏற்பட்டு பொதுஜனங்கள் அவைகளுக்கு சென்று யாதொருகட்டணமும் செலுத்தாமல் வாசிக்கும்படி ஏற்பாடுசெய்தால் ஜனங்களுக்குள் படிப்புபரவுமென்பது அவருடைய கொள்கை. அவர் இறந்துபோய் விட்டதைப்பற்றி எல்லாவகுப்பார்களும் துயரப்படுகிறார்கள்.

Pure Milk Supply.

பரிசுத்தமான பால்.

வெளியூர்களில் முக்கியமான பாரிநகர்களுக்கு சுத்தமானபால் சப்ளை செய்யப்படவேண்டுமென்பதைப்பற்றி பம்பாய் கவர்ன்மெண்டார் பத்திரிகைகளில் ஒரு முக்கியமான பிரசுரம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். "சுகாதார விதிகளை அனுசரித்து பசுமாட்டுக் கொட்டங்களும் கட்டடங்களும் கட்டிக் கொடுக்கப்பட்டும், பால்கரக்கும் பாத்திரங்களுக்கும் இன்னும் அந்தத் தொழிலுக்கு வேண்டியசாமான்களும் செய்யப்பட்டு அற்பவாடகைக்குபால்காரர்களுக்கு கொடுக்கப்படலாமென்றும் இவ்வகை ஏற்பாடுகள் முனிசிபாலிட்டியாரால் செய்யப்பட வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார்கிராமசுகாதாரத்திற்கு வருஷாவருஷம் கொடுக்கும் பணத்துடன்இந்த ஏற்பாட்டிற்கும் சேர்த்துக் கொடுப்பார்கள் என்றும் தற்காலம் இந்த ஏற்பாட்டிற்காக முனிசிபாலிட்டியில் செய்யப்படும் செலவில் எவ்வளவுபாகம் கவர்ன்மெண்டாரால் ஒப்புக் கொள்ளப்படுமென்று சொல்ல முடியாதென்றும், ஆனால் செய்யப்படப்போகிற ஒவ்வொ

ரு ஏற்பாட்டின் விபரத்தை அறிந்து கொண்டதின்பேரில் அதற்குத் தேவையான செலவுகளையும் அந்த செலவுகளைத் தாங்கும்படியான சக்தி முனிசிபாலிட்டிக் கிருக்கிறதா என்கிற விஷயத்தையும் கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்து தாங்கள் கொடுக்கவேண்டிய பாகத்தை நிர்ணயிப்பார்கள்.—" ஆகிய இந்த விஷயங்கள்தான் ஷை பிரசுரத்தில் அடங்கியிருக்கின்றன.

"Twingone" Disaster.

"டுவின்கான் சேதம்."

தூத்துக்குடி துறைமுகத்தில் தீக்கிரையான டுவின்கான் என்கிற எண்ணெய்க் கப்பலில் தீப்பிடிப்பதற் குள்ள காரணங்களைப் பற்றி ஒரு விசாரணை சென்னைப் பட்டணத்தில் நடக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இன்னும் அந்த ஸ்டீமர் தூத்துக்குடியிலேயே எரிந்துகொண் டிருக்கிறது. இவ்வளவு நாள் எரிந்தும் ஸ்டீமருக்குள்ளிருக்கும் தடாகம் சேதப்படாம லிருப்பதால் ஸ்டீமர் பலமான ஸ்டீமராக எண்ணப்படுகிறது. மெசர்ஸ் ஆர்ம்ஸ்டிராங் விட்வொர்த் கம்பெனியார் இந்த ஸ்டீமரைச் செய்தவர்கள்.

P. and O Dispute.

பி. அண்டு ஓ கம்பெனி தகரார்.

பி. அண்டு ஓ கம்பெனி பாரி ஸ்டீமர் கம்பெனி. இவர்களுக்கு அனேக ஸ்டீமர்களிருக்கின்றன. இந்தக் கம்பெனியின் டைரக்டர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் மனஸ்தாப முண்டாகி ஸ்டீமர் உத்தியோகஸ்தாகளில் அநேகர் உத்தியோகத்தை ராஜிநாமா கொடுத்து விட்டார்கள். இதன் பேரில் லண்டன் லிடன் ஹால் தெருவில் டைரக்டாகள் ஒரு மீட்டிங் கூடி ராஜிநாமா கொடுத்த உத்தியோகஸ்தர்களைத் தருவித்துப் பேசினார்கள். மற்ற ஸ்டீமர் கம்பெனிகளில் புதிதாய் உத்தியோகத்திற்கு வந்தவனுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம்கூட 10-வருஷ அனுபோகமுடைய உத்தியோகஸ்தனுக்கு இந்த கம்பெனியில் கொடுக்கப்படுகிறதில்லை என்றும் ஞாயிற்றுக்கிழமை வேலைக்குப் பிரத்தியேகமான சம்பளம் கொடுக்கப்படுகிறதில்லை என்றும் ஆபிசர்கள் தங்களுடைய குறைகளைச் சொல்லிக் கொண்டார்கள். டைரக்டர்கள் கூடிய பட்டுல ஆபீஸர்களுடைய கோக்கங்களையும் குறைகளையும் நிறைவேற்றி வைத்தார்கள். ஆதலால் ராஜிநாமா கொடுத்த உத்தியோகஸ்தர்கள் உத்தியோகத்தை ஒப்புக்கொண்டு உடனே ஸ்டீமருக்குப் போக பிரயாணப்பட்டு விட்டார்கள்.

——(:o:)——

A Trades-Mark Bill Required.

வர்த்தக அடையாளங்கள் சம்பந்தமான சட்டம் தேவை.

யோக்கியமான வர்த்தகர்களுடையவும் பொருள்களைச் செய்கிறவர்களுடைய உரிமைகளையும் பாது காக்கும்படியான சட்டம் இந்தியாவில் பிறப்பிக்கப் படாமாவிருக்கிறது மிகவும் விசனிக்க தக்கதாயிருக்கிறது. வர்த்தக சாமான்களுடைய அடையாளங்களை ரிஜிஸ்டர் செய்யும்படியாக கட்டாயப்படுத்தும் சட்டம் இந்தியாவிலில்லை. இந்தியாவில் பிரதான நகர்களில் ஏற்பட்டிருக்கும் சேம்பர் ஆப் காமர்ஸ் சபையில் வர்த்தக அடையாளங்களை ரிஜிஸ்டர் செய்ய

ரிஜிஸ்டர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன வென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அபேக்ஷைப்படும் வியாபாரிகள் இஷ்டமிருந்தால் ரிஜிஸ்டர் செய்து வைக்கலாமே யொழிய எல்லா வர்த்தகர்களும் தங்களுடைய சாமான்களை ரிஜிஸ்டர் செய்து வைக்க வேண்டியது அவசியமல்ல. மேலும் இப்படி சேம்பர் ஆப் காமர்ஸ்களின் ரிஜிஸ்டரில் வர்த்தக அடையாளங்களை ரிஜிஸ்டர் செய்துவைத்த போதிலும் அதைப்பற்றியசட்டம் ஒன்றிருந்தால் எவ்வளவு வலுவுடையதாயிருக்குமோ அவ்வளவு வலுவுடையதாயில்லை. ஆகையால் வர்த்தக அடையாளங்களை ரிஜிஸ்டர் செய்துவைக்க ஒரு சட்டம் பிறப்பிக்கப்படவேண்டுமென்றும் அப்படி ரிஜிஸ்டர் செய்துவைத்திருப்பதை முன்னிட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் அடையாளத்தை உடைய சாமான் அன்னாருடையதென்று சந்தேகமின்றி தீர்மானிக்கப் படவேண்டும். இப்பேர்ப்பட்ட ஒரு சட்டம் இன்னும் இந்தியாவில் பிறப்பிக்கப்படாமலிருக்கிறது. மிகவும் விசனிக்கக்கூடிய காரியமாயிருக்கிறது. கைத்தொழில்களும் வர்த்தகமும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டுவரும் இக்காலத்தில் இப்பேர்ப்பட்ட ஒரு சட்டம் இருக்க வேண்டியது அவசியத்தினும் அவசியம். பாடுபடாத மனிதர்கள் பயனை அடைய விரும்பி போலி அடையாளங்களைப் போட்டுக்கொண்டு அவர்களுடைய மட்ட சாமான்களை உயர்ந்த சாமான்கள் போல விற்பனையாகும்படியாகச் செய்கிறார்கள். வர்த்தகம் கைத்தொழில் இன்னும் ஓங்கிவளர போட்டிக்ரு ஒரு எல்லை இருக்கமாட்டாது. போட்டிவளர விரோதமும் உண்டாகக்கூடும். விரோதம் வளர்ந்தால் போலி வர்த்தக அடையாளங்களை உபயோகப்படுத்தவும் சிலர் உடன்படுவார்கள். ஆதலால் இதுவிஷயமாக ஒரு சட்டம் பிறப்பிக்கப்படவேண்டுமென்றும் இது விஷயமாக தேசத்திலுள்ள வர்த்தக சபையார்கள் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

St Andrew's Dinner's in Madras.

சென்னையில் சேண்ட் ஆண்ட்ரூஸ் விருந்து.

செண்ட் ஆண்டிரூஸ்விருந்து என்பது ஸ்காட்லண்டு தேசத்தாருடைய புராதீனமானவிருந்து. இந்தியாவை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கைப்பற்றின காலமுதல் இந்தியாவிலும் ஆங்கிலேயர்கள் கூடி இந்த விருந்தை நடத்திக் கொண்டாடி வருகின்றார்கள். இந்த விருந்தில் ஆங்கிலேயர்கள் விருந்து சாப்பிட்டுவிட்டு தேச வர்த்தமானங்களைப்பற்றிப் பேசுவார்கள். பெரும்பாலும் அரசாங்க விஷயங்களைப் பற்றி பேசமாட்டார்கள். ஆனால் வர்த்தக விஷயங்களைப் பற்றி பேசுவார்கள். சென்ற நவம்பர் மாசம் 29-ந் தேதி சனிக்கிழமை இரவு நடந்த விருந்து பீப்பில்ஸ் பார்க்கிலிருக்கும் மூர் பாவலியனில் நடத்தப்பட்டது. சுமார் 150 வெள்ளைக்காரர்கள் வந்திருந்தார்கள். சென்னை மகாகனம் பொருந்திய கவர்னர் சபாநாயகராயிருந்தனர். வெகு நாழிகை வரையில் லோகவர்த்தமான பேச்சுகள் நடந்தன. ஆனால் கூவம் ஆற்றில் துர் நாற்றம் வீசுகிறதென்றும் அதற்குப் பணம் செலவு செய்தால் இன்ஜினீர்களைக் கொண்டு ஒழுங்குபடுத்துவது சாத்தியமான காரியமென்பதும், போதனூர் பொள்ளாச்சி இருப்புப் பாதைக்கு ஆனையில் சர் எச். ஸடூர்வர்ட் சென்ற நவம்பர் மாதத்தில் அஸ்திவாரக்கல் போட்டார் என்பதும் விஜாக பட்டணத்திலும் கொச்சியிலும் துறைமுகங்கள் கட்டப்பட வேண்டுமென்பதும் ஆகிய இந்த விஷயங்கள் வர்த்தக நோக்கத்தை யுடைய நம்முடைய சென்னை வியாபாரிக்கு உரித்தானவை.

———(:o:)———

TRADE NOTES AND NEWS.

வியாபாரக் குறிப்புகளும் சமாச்சாரங்களும்.

The Indian Specie Bank.

இந்தியன் ஸ்பெஸி பாங்க்.

பம்பாயில் கடந்த 17 வருஷங்களாக நடந்துவந்த இந்தியன் ஸ்பெஸிபாங்க் சென்ற நவம்பர் மீ 29உ கதவை மூடிப்போட்டது. அது 75 லக்ஷ ரூபாய் மூலதனத்துடன் 1906ல் மிஸ்டர் கன்னிலால் ர. சாரப்யா என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. பங்கு எடுத்துக்கொண்டவர்கள் இன்னும் 75 லக்ஷம் கொடுக்கவேண்டியதாகவு மிருக்கிறது. இந்த பாங்க் பெரும்பாலும் வெள்ளியிலும், கவர்ன்மெண்டு புரோநோட்டுகளிலும் அகண்டபேரங்கள் செய்துவந்தது. இதற்கு: லண்டன், கல்கத்தா, ஆமடாபாட், பூனா, லக்னோ, கராச்சி, நாகப்பூர், சூரட், சுக்கூர், பரோடா, புரோச், இன்டோர், பாவநகர், கோல்காப்பூர், நாஸிக், ராஜக்கோட், ஷிக்கார்ப்பூர், டியூலிபா, பியோட்மாங்—ஆகிய இந்த விடங்களில் கிளைகளிருக்கின்றன. 1907-ம் வருடம் முதல் நாளதுவரையில் வருஷாவருஷம் 100 க்கு 5 முதல் 8 வரையில் பங்குதார்கள் லாபம்பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். 15 லக்ஷ ரூபாய் இதற்கு ரிசர்வ்பண்டு உண்டு. இந்த பாங்குக்கு நிலுவைப்பணம் வசூலாகவேண்டியதிருப்பதால் டிபாசிட்டர்கள் பெரும்பாலும் நஷ்டமடையமாட்டார்கள் என்று எண்ணப்படுகிறது. எப்படியிருந்தபோதிலும், இந்த பாங்க் முறிந்துபோனதால் சென்னைமாகாணம் நேரே பாதிக்கப்படமாட்டாது.

Death of a Mahomedan Merchant.

ஒரு பிரபல முகமதிய வர்த்தகரின் மரணம்.

சென்னப்பட்டணம் கிடங்குத் தெருவில் சீமை ஜவுளி வியாபாரஞ் செய்யும் மெசர்ஸ் கிஜார்முகமத் சாயப்பு கம்பெனியின் முதல் பாக்ஸதராயிருந்த ஜனேல் ஹாஜிமோல்வி முகத்பாஷீர் சாகேப் சென்ற நவம்பர் மீ 28-ம்உ வெள்ளிக்கிழமை தினம் கிடங்குத் தெருவிலிருக்கும் அவருடைய கிரகத்தில் இறந்துபோனதைக் கேள்விப்பட்டு விசனமடைகின்றோம். இவர் முகமதிய மதஞானம் சம்பூர்ணமாய் அடைந்தவர். நடவடிக்கைகளிலும் மிகுந்த ஆசாரமும் தெய்வபக்தியுமுடையவர். மேலும் தாராளமான தருமச்சிந்தை உடையவர். அனேக தருமங்களும் செய்துவந்தார். ஆதலால் முகம்மதிய வகுப்பாரால் மிகவும் நன்கு மதிக்கப்பட்டு வந்தனர். இவருடைய பிரேதம் ரயிலில் வாணியம்பாடிக்கு அனுப்பப்பட்டது. சமாதிகிரியைக்கு வாணியம்பாடியிலேயே சுமார் 600 முகமதியர்கள் வந்திருந்ததுமன்றி சென்னப்பட்டணம், வேலூர் பெங்களூர் முதலிய விடங்களிலிருந்தும் அனேக முகமதியர்கள் சென்றிருந்தார்கள். இவருக்கு இறந்து போகும்போது வயது 35 ஒரு புத்திரனும், இரண்டு புத்திரிகளு மிருக்கிறார்கள்.

Death of Mr. Cunnilal, D. Saraya.

மிஸ்டர் கன்னிலால் டி. சாரய்யாவின் மரணம்.

மிஸ்டர் கன்னிலால் டி. சாரய்யா என்பவர் தான் பம்பாயிலிருந்து முறிந்துபோன இந்தியன் ஸ்பெஸிபாங்கிற்கு மானேஜிங் டைரெக்டர். இவரே தான் அந்த பாங்கியை ஸ்தாபித்தவர். இதற்கு முந்தி இவர் பம்பாய் பாங்கில் பில் டிபார்ட்மெண்டில் வேலை பார்த்தவர். இவருக்கு பாங்கி விஷயங்களி ஆச்சரியப்படும்படியான சாமர்த்தியமுண்டு. மிக நிபுணர். இந்த குணாதிசயம் இவரிடமிருந்ததால்தான் இவர் இந்தியன் ஸ்பெஸிபாங்க் ஸ்தாபித்தவுடன் ஹிந்துக்கள் எல்லாம் அந்த முயற்சியில் சேர்ந்து பணம் போட்டும் பங்கு மெடுத்துக்கொண்டார்கள். 17 வருஷம் இந்த பாங்கி நடைபெற்று வந்ததில் ஒரு தடவைக்கு மேலாக இந்த பாங்க்கிற்கு பணக்கஷ்டம் உண்டானது. அந்த சமயங்களில் எல்லாம் மிஸ்டர் கன்னிலாலுடைய சாதுரியத்தாலும் சாமர்த்தியத்தாலும் அந்தப்பணக் கசாலா நீங்கினது. 1911ல் முத்துவர்த்தகர்களுக்கு நேரிட்ட பண சங்கடத்தை நீக்கிவைத்தனர். 1912 ல் இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா, சீனா பஜார்களில் அகப்படக்கூடிய எல்லா வெள்ளியையும் 3 கோடி ரூபாய்க்கு வாங்கிப்போட்டார். சிறிது நாட்களுக்கு முந்திதான் பாங்கியின் நிலைமையைச் சோதனை செய்ய மெசர்ஸ் பெர்கூசன் அண்டுகோ என்பவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

பாங்கியின் நிலைமை சோதனை செய்யப்படப்போகிற சமயத்தில் இவர் திடீரென்று இறந்துபோய் விட்டபடியால் பாங்கியின் சேர்மேனாகிய சர் வித்தால்தாஸ் தாக்கர்சி என்பவருக்கு சந்தேகம் உண்டாகி விசாரிக்க புகுந்தபோது மிஸ்டர் கன்னிலால் என்பவர் வெள்ளி விலை ஏறுமென்று அகப்படக்கூடியவெள்ளியை எல்லாம் ரகசியமாகவே வேறொருவர் பெயரால் வாங்கிப்போட்டாரென்றும் வெள்ளிவிலைகுறையவே அவதவிற்கும்போது கொடுக்கவேண்டிய நஷ்டப்பணத்தை எல்லாம் பாங்கி கொடுத்துக் கொண்டுவந்ததென்றும் இதுவுமன்றி வெள்ளியில் முடக்கப்பட்டிருக்கிற ஏராளமான பணத்திற்கு வெகுகாலமாகலட்டி. பாங்கியிலிருந்தே எடுத்துக்கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் புலப்பட்டது. மிஸ்டர் கன்னிலால் என்பவர் இருதய ஓய்வால் இறந்துபோனார் என்று பலர் சொல்லுகிறார்கள். சிலர் சந்தேகிக்கிறார்கள். பாங்கியை சட்டப்பிரகாரம் முடிவுக்குக் கொண்டுவர தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

Peshwar Bank Limited.

பீஷ்வார் பாங்க்.

மூல்ட்டான் நகரிலிருக்கும் பீஷ்வார்பாங்கை முடிவுக்குக் கொண்டுவரும்படி கட்டாயப்படுத்த கோர்ட்டில் ஒருமனு செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. பாலன்ஸ் ஷீட்டை தாக்கல் செய்யாததற்காக டைரக்டர்கள் பிராசிக்கியூட் செய்யப்பட்டு தலைக்கு இரண்டாயிர ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Return of Muslim Pilgrims.

முகமதியர் யாத்திரிகள் திரும்பிவந்து விட்டார்கள்.

மெக்காவிற்கு சென்னை வேலூர் வாணியம்பாடி முதலிய விடங்களிலிருந்து யாத்திரைக்குப்போன முகமதிய வியாபாரிகள் நிகழ்மாதம் 2ம் தேதி சென்னைக்குத் திரும்பிவந்து விட்டார்கள். சென்னை பிராட்வேயிலிருக்கும் தோல்வியாபாரம் மிஸ்டர் P. அப்தல் ரகிமான் அவர்கள் ஷேயாதீரீகளுக்கு ஒரு பெரியவிருந்து நடத்தி வைத்து உபசரித்தனர்.

Gross Earnings of Railways.

ரெயில்வேக்களுடைய சம்பாதனை.

கவர்ன்மெண்டு ரயில்வேயும் கவர்ன்மெண்டு ஜவாப்பு தாரியாகவிருக்கும் கரன்ட்டீட் ரயில்வேயும் ஆக இரண்டு ரயில்வேக்களும் எப்பிரல் மாதம் முதல் தேதிமுதல் நவம்பர் மாஸம் 22-ட வரையில் செய்தவேலையில் அதேகாலத்தில் சென்ற வருஷத்திய லாபத்தைவிட ரூ. 15,70, 497 லாபம் வந்திருக்கிறதாம்.

Arbuthnot's Insolvency.

அர்பத்நட் இன்சால்வென்ஸி.

ஐந்தாவது முறைபட்வாடா எங்கெந்தக்கடன்காரர்களுக்குக் கிடைக்கவேண்டுமோ அவர்கள் அபிஷியல் அஸைனியிடம் சீக்கிரம்சென்று பெற்றுக்கொள்ளாவிடில் அவர்களுடைய பணம் அக்கவுன்ட்டன்ட் ஜெனராலிடம் சேர்ப்பிக்கப்படுமென்ற விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

Trade's Union Club Meeting.

வர்த்தகயூனியன் கிளப்.

டிரேட் யூனியன்கிளப் மவுண்ட் ரோடிலிருக்கிறது. இதன் மானேஜிங் கமிட்டியிலிருந்த மிஸ்டர் C. M. ஷண்முகமுதலியார் நிகழ்மாதம் 4ௗ இறந்து போனதற்காக அனுதாப மீட்டிங்கூடி துக்கம் பாராட்டிப் பேசினார்கள்.

Sheriff for Calcutta.

கல்கத்தா ஷெரீப்.

மெசர்ஸ் லில்லி கம்பெனியைச்சேர்ந்த மிஸ்டர் எவ். எச். ஸ்டிவார்ட் சி. ஐ. இ. என்பவர் கல்கத்தாவிற்கு ஷெரிப்பாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

Science Congress.

சாஸ்திர ஆருயச்சி காங்கிரஸ்.

சாஸ்திர ஆராயச்சி கான்கிரஸ் ஒன்று அடுத்த ஜனவரிமீ 15,16,17 தேதி களில் கல்கத்தாவில் கூடும். வங்காள கவர்னர் லார்ட் கார்மிக்கல் அதன் போஷகர். அநேக புரோபசர்களும், சாஸ்திரஞான முடையவர்களும் உபந்நியாசங்கள் செய்வார்கள்.

Technical Scholarships.

கைத்தொழில் உபகாரச்சம்பளம்.

கைத்தொழில் படிப்புக்காக அந்நிய தேசங்களுக்குப் போகும் அவசியம் ஏற்படாதபடி இந்தியாவிலும் பர்மாவிலும் கைத்தொழிற் படிப்பு அவ்வளவுதூரம் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், இந்தியர்களுக்கும் பர்மாக்காரர்களுக்கும் கைத்தொழிற படிப்புடன் பொதுக்கல்வியும் பொருந்தியிருந்தால் பெரிய கைத்தொழில் ஆபீசுகளைக்கூட அவர்களே நடத்தி வரும்படியான சக்தி அவர்களுக் குண்டாகுமென்றும் பர்மாச் சேம்பர் இந்தியா கவர்ன்மெண்டாருக்குப்பதில் எழுதி யிருக்கிறார்கள்.

Merchants' Bank.

வியாபாரிகள் பாங்க்.

பம்பாய் மொச்சன்ட் பாங்கை முடிவுக்கு கொண்டுவரும்படி ஐக்கோர்ட்டு அசல் தரப்பில் மனுசெய்து கொள்ளப்பட்டிருக்கிறது, என் இப்பாங்கியை முடிவுக்குக்கொண்டு வரக்கூடாதென்பதற்கு காரணம் காட்டும்படியாக நோட்டீஸ் உத்திரவு செய்திருக்கிறார்கள். விசாரணை இம்மாதமே போடப்பட்டிருக்கிறது.

Tata Iron and Steel Trust.

டாட்டா இரும்பு எஃகு டிரஸ்ட்.

இந்த டிரஸ்ட் கம்பெனியின் பங்கின்கிரையம் மிகவும் இறங்கிப்போயிருக்கிறது. ஏன் என்றால் அது சென்றவருஷ டிவிடெண்டை இன்னும் பட்வாடா செய்யவில்லை. மேலும் இந்தியன் ஸ்பெஸிபாங்கில் $2\frac{1}{2}$-லக்ஷம் போட்டிருந்ததாம். இந்தபாங்க்கு முடிவுக்குக் கொண்டு வந்துவிடும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறபடியாலும், போட்டபணம் முழுதிலும்வராது என்று எண்ணப்படுகிறபடியாலும் ஜனங்கள் டாட்டா இரும்பு டிரஸ்ட் கம்பெனியின் பங்குகளை வாங்கப்பயப்படுகிறார்கள்.

Amrtsar Bank.

அமிரிட்சர் பாங்க்.

அமிர்ட்சர் பாங்கை முடிவுக்குக் கொண்டு வரும்படி கட்டாயப்படுத்தலாகூர் ஜில்லா ஜட்ஜி உத்திரவு செய்திருக்கிறார்.

Karachee Chamber's View.

கராச்சி சேம்பர் அபிப்பிராயம்.

பாங்கி முயற்சிகளை அடக்கிப் பரிபாலிக்கும்படியாக சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்று காராச்சி வர்த்தகச் சேம்பர் அபிப்பிராயப் படுகின்றது.

Death of an Aeranaut.

பறக்கிறவருடைய மரணம்.

ஆகாயத்தில் பறக்கிறவராகிய மிஸ்டர் A. C. காட்ரான் என்பவர் கடந்த நவம்பர் மாதம் 10 தேதி இறந்துபோய் விட்டார். லண்டனில் அலக்சான்டிரா அரண்மனையிலிருந்து பலூன் என்கிற புகைக் கூண்டில் பலதடவை ஏறியிருக்கின்றனர்: லண்டனிலிருந்து ஸ்வீடனுக்குப் பறந்து வந்திருக்கிறார். லண்டனிலிருந்து ஸ்வீடனுக்கு 1117-மைலில் பலூனில் பறந்திருக்கிறார். லண்டனிலிருந்து பவேரியாவுக்கும் பறந்து வந்திருக்கிறார்.

Holiday Trips by Sea.

கிரிஸ்மஸ் ரஜாவில் சமுத்திர பிரயாணம்.

பி. ஜ. எஸ். என். ஸ்டீமர் கம்பெனியின் ஏஜண்டுகளாகிய மெஸர்ஸ் பின்னி கம்பெனியார் கிரிஸ்டமஸ் பண்டிகை ரஜா நாட்களுக்குள் அடியிற்கண்ட விடங்களுக்கு போகவும் திரும்பவும் ஸ்டீமர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சென்னையிலிருந்து கல்கத்தா ரெங்கூனுக்கு போகவும் திரும்பவும், சென்னையிலிருந்து ஸ்டிரேட்சுக்குப் போகவும் திரும்பவும், சென்னையிலிருந்து பினாங்கு சிங்கப்பூருக்கு.

இதன்றி ஸ்டீமர் சேர்வையும் மிதப்படுத்தியிருக்கிறதாகத் தெரிகிறது. விருப்பமுள்ளவர்கள் மெஸர்ஸ் பின்னி கம்பெனியாருக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்.

Steamer Speed Accelarated.

ஸ்டீமர்வேகம் அதிகப் படுத்தப்பட்டது.

இந்திய தபால்களை பம்பாயிலிருந்து லண்டனுக்குக் கொண்டு போகும் பி. அண்டு ஓ. கம்பெனியின் ஸ்டீமர் வேகம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பம்பாய் துறைமுகத்தை விடும் ஸ்டீமர் முன்னுக்கு இப்போது ஒரு நாள் முந்தி லண்டனைப் பிடிக்கிறது.

——(:o:)——

Marine Police.
சமுத்திர போலீஸ்.

நாகப் பட்டணம் துறைமுகத்தில் சரக்குகள் திருட்டுப் போகிறபடியால் ஜில்லா கலெக்டர் ஒரு வர்த்தக மீட்டிங் கூட்டி வர்த்தகர்களுடன் கலந்து பேசி ஒரு சார்ஜென்ட்டும், இரண்டு எட் கான்ஸ்டேபில்களும் 9-கான்ஸ்டேபில்களும் கூடிய ஒரு சிறிய போலீஸ் படை துறைமுகத்தில் பந்தோபஸ்தா யிருக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்.

Poisoning of Cows.
பசுக்களுக்கு பாஷாண மிடுதல்.

மிட் னாப்பூரில் பால் விற்பனையில் போட்டி உண்டா யிருப்பதால் போட்டி போடுகிறவர்கள் விரோதத்தின்பேரில் எதிரிகளின் பசுக்களுக்கு பாஷாணமிட்டு கொன்று விடுகிறார்கள்.

Arrival of Mail Steamer.
சீமைத்தபால் ஸ்டீமர் வருகை.

நிகழ் மாசம் 5-ம் தேதி வரவேண்டிய சீமைத் தபால் ஸ்டீமர் 7-மணி நேரம் தாமதமாய் வந்து சேர்ந்தது. காரணம் ஐரோப்பா கண்டத்திற் சீமைத் தபால் கொண்டுவரும் ரயில் தாமதப் பட்டதாம்.

Death of a Merchant.
ஒரு வியாபாரியின் மரணம்.

சென்னை கிடங்குத் தெருவில் சீமை ஜவுளி வியாபாரஞ் செய்யும் மெசர்ஸ் ஹாஜி அப்தல் மஜீத் சாயப்பு அண்டுகோ என்பவர்களின் பிரதம பாகஸ்தராகிய மண்டி முக்மத் உசேயின் சாயப்பு நிகழ் மாதம் 7-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் வாணியம்பாடியி லிருக்கும் அவருடைய ஜாகையில் இறந்து போய்விட்டார் என்று கேள்விப்பட்டு விசனிக்கிறோம். இவர் எப்போதும் காருண்யச் சித்தமுடையவர். ஏழைகளிடம் அனுதாபம் காட்டிவந்தனர். பால்க்கன் சண்டையில் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்த துருக்கி தேசத்தாருக்கு இத்தேசத்தில் ஏற்படுத்தப்பட்ட நிதிக்கு யதேஷ்டமாக நன்கொடை கொடுத்துவந்தனர். இவருக்கு நான்கு குமாரத்திகளிருக்கிறார்கள்.

Railway Notification.
ரயில் விளம்பரம்.

தென் இந்தியா இருப்புப்பாதையில் நேரிட்ட உடைப்பை முன்னிட்டு மதிராஸ் ரயில்வே கம்பேனியார் சென்டிரல் ஸ்டேஷனிலிருந்து மாயவரம் முதலான ஸ்டேஷன்களுக்கு ஈரோடு சுற்றிப்போகும்படியாக ஸ்பெஷல் வண்டி விட்டுக்கொண்டு வந்தார்கள் இந்த ஏற்பாடு நிகழ் மாதம் 10-ந்தேதி முதல் நின்றுபோய்விட்டது.

Demand for Fish.
மீன் கிராக்கி.

கொளும்பில் மீன் கிராக்கியாயிருக்கிறது. காரணம் என்னவென்றால் மீன் பிடிக்கும் தொழிலாளிகள் அத்தொழிலில் வருமான மில்லை என்று முன்போல தொழில் நடத்துகிறதில்லை.

Motor Waggons.
மோட்டார் வாக்கின்கள்.

கல்கத்தா முனிசிபாலிட்டியில் இப்போது உபயோகப் படுத்தப்பட்டு வரும் குப்பை வண்டிகளுக்குப் பதிலாக ரூ. 62 ஆயிரம் செலவு செய்து மோட்டார் வாக்கின்களை உபயோகப் படுத்தி வரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

Kidnapping of a School-boy.

ஒரு பள்ளிக்கூடத்துப் பையன் களவாடப்பட்டான்.

பாலக்காட்டில் 13 வயதுடைய ஒரு பையன் சிலோன் லேபர் கமிஷன் ஏஜண்டால் காசோரஞ் செய்யப்பட்டு கொழும்பிற்கு அப்பாலுள்ள ஒரு தோட்டத்திற்குக் கொண்டுபோகப்பட்டான். பாலக்காட்டு எட் அஸிஸ்டன்ட் மாஜிஸ்ட்ரேட் ஷை பையனுக்கும் கங்காணிக்கும் வாரண்டு பிறப்பித்து பாலக்காட்டிலிருந்து இரண்டு எட்கான்ஸ்டேபில்கள் அனுப்ப இவர்கள் அந்தப்பையனையும் கங்காணியையும் கைது செய்து கொண்டு வந்துவிட்டார்கள். பாலக்காட்டிலிருந்த எமிகிரேஷன் ஏஜண்டும் ஷை கங்காணிபழனியும் பிராஸிக்யூட் செய்யப்பட்டிருக்கிறார்கள். நவம் 17௳ முதல் விசாரணை நடந்து வருகிறது.

A Merchant's Beneficence.

ஒரு வியாபாரின் நன்கொடை.

விஜாகபட்டணத்திலிருக்கும் பாரிஸியா வியாபாரியாகிய மிஸ்டர் ராமமூர்த்திசெட்டி என்பவர் கவர்ன்மெண்டு உயர்தர பெண்பாடசாலையில் வாசித்துவரும் பெண்களுக்குள் முதன்மையாகநிற்கும் பெண்ணிற்கு வருடாவருடம் ஒரு தங்கமெடல் கொடுப்பதாயும் அதற்கு நம்மாலிண கவர்னருடைய பெயரைச்சூட்டி “பெண்ட்லெண்ட் மெடல் என்று சொல்லப்பட்டு வருமென்றும்கனம் பொருந்திய கவர்னர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் போகுனபோது அறிவித்திருக்கின்றனர்.

Seizure of Opium.

அபின் பிடிபட்டது.

சிட்டக்காங்கிலிருந்து கல்கத்தா துறைமுகத்திற்குவந்த “கோவினூர் “என்னும் ஸ்டீமர் சோதனை செய்யப்பட்டதில் மிஸ்டர் ஸிமமன்ஸ் என்கிற இரண்டாவது இன்ஜினீர் அறையில் அரைமணங்கு அபினிருக்க அவர் கைது செய்யப்பட்டார்.

A Musical Concert.

சங்கீதகச்சேரி.

பெஸ்வாடா முனிசிபாலிட்டிக்கு புதிதாய் நியமிக்கப்பட்ட சேர்மெனாகிய மிஸ்டர் டி. வி. ஹனுமந்தராவ் அவர்களுக்கு மரியாதை காட்டும்பொருட்டு வியாபாரிகள்கூடி ஒரு பாட்டுக்கச்சேரி நடத்திவைத்தார்கள்.

The Flight to Cairo.

கேய்ரோவுக்குப் பறந்து போகப்போகிறார்.

லேட்ரேயின்ஸ் என்பவர் லண்டனில் ஆகாயக் கப்பலில் ஏறி ஹங்கேரி வழியாக பெல்டிரேவுக்கு பறந்து அங்கு இறங்கியிருக்கிறார். பெல்டிரேவிலிருந்து கேய்ரோவுக்குப் பறந்து பாலஸ்ட்டின் வழியாக இந்தியாவுக்குப் பறந்து வருவார் என்று லண்டனிலிருந்து 4-ந்தேதி சென்னை டைம்ஸ் பத்திரிகைக்கு வந்த ஒரு தந்தி அறிவிக்கின்றது.

Arrest of Two Europeans.

இரண்டு ஐரோப்பியர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

கல்கட்டாவில் டாடா ஆலைகளில் வேலை செய்துகொண்டிருந்த இரண்டு ஐரோப்பியர்கள் ஆலை சொந்தக்காரர்களுடன் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தை மீறி இங்கிலாண்டிற்கு கொழும்பு மூலியமாய்ப் போவதற்கு நிகழ் மாதம் 4-ந்தேதி சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் வந்திறங்கியபோது ரெயில்

இலாக்கா போலீஸார் கைது செய்திருக்கிறார்கள். கல்கட்டாவிலிருந்து வரவேண்டிய வாரண்டை எதிர்பார்த்து ரிமாண்டு ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

Inspector General of Forests.

காட்டிலாக்கா இன்ஸ்பெக்டர்.

இந்த உத்தியோகத்தை எடுத்துப்போடுவதாக கவர்ன்மெண்டார் யோஜனை செய்துகொண்டிருந்தார்கள். இந்த யோஜனையை இப்போது நீக்கிவிட்டார்கள்.

Automatic Telephone.

நூதன டெலிபோன்.

ஒரு நூதன டெலிபோன் கண்டுபிடிக்கப்பட்டு ஸிம்லாவில் வைக்கப்படப்போகிறது. பிப்ரவரி ௴ 2-ம் தேதிக்குள் தயாராய்விடும். பொது ஜனங்கள் இந்த யந்திரத்தையும் அது வேலை செய்யும் விதத்தையும் வந்து பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

British Postal Unrest.

தபால் இலாக்கா சிப்பந்திகள் கட்டுப்பாடு.

இங்கிலாண்டில் தபால், தந்தி இலாக்கா சிப்பந்திகள் சம்பளங்களை 100-க்கு 15-வீதம் உயர்த்தினாலொழிய வேலை நிறுத்தம் உண்டாகுமென்று பயமுறுத்துகிறார்களாம்.

Gold Shipment to India.

இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிற பொன்.

நிகழ் மாதம் 3-ந்தேதி லண்டனிலிருந்து புறப்பட்டுவந்த "பெர்ஷியா" என்னும் ஸ்டீமர் 340,800 பவுன் பொருமானமுள்ள பொன் கொண்டுவந்தது.

A Life-Saving Discovery.

உயிரைக் காப்பாற்றும் ஒரு நூதனக்கருவி.

லண்டன் லீடன்ஹால் தெருவிலிருக்கும் மிஸ்டர் ஜி. என். பாடி என்பவர் "Autimatic life—Saving Jacket." என்று ஆங்கிலத்தில் சொல்லும்படியான உயிரைக் காப்பாற்றும்படியான ஒரு சட்டை ஒன்று சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்து கண்டுபிடித்திருக்கின்றனர். இந்தச் சட்டை ஒரு குழந்தைக்குப்போட்டு சமுத்திரத்தில் எறிந்தாலும், அக்குழந்தை முழுகிப்போகாமல் ஜலத்தின்பேரில் மிதக்கிறது. காரணம் என்னவென்றால் சட்டை மிதக்கும்படியான மரத்தைக்கொண்டு படுக்கும் மெத்தைபோல மிருதுவாக விருக்கும்படியாகச் செய்யப்பட்டிருக்கிறது. சமுத்திரத்தில் ஸ்டீமர் பிரயாணம்செய்யும்போது அபாயம்நேரிட்டால் இந்த சட்டையைப் போட்டுக்கொண்டு சமுத்திரத்தில் குதித்துவிட்டால் சமுத்திரத்தில் மூழ்கிப்போகாமல் மிதந்துகொண்டிருக்கலாம். இதற்குள்ளாக உதவிக்குவரும் ஸ்டீமர்களில் ஏறிக்கொள்ளலாம். இதற்கு முன்பும் இம்மாதிரி சட்டைகள்கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பிரஸ்தாப மிஸ்டர்பாடி என்பவர் செய்திருக்கும் சட்டைகளைப்போல வசதி உடையனவல்லவாம். லண்டனிலிருக்கும் வர்த்தக சங்கத்தார்கள் மிஸ்டர் பாடியினுடைய சட்டைக்கு அனேக நற் சாக்ஷிபத்திரங்கள் கொடுத்து பரிசும் அளித்திருக்கிறார்கள் மேலும் இந்த சட்டையை எல்லா ஸ்டீமர் கம்பெனிக்காரர்களும் ஆயிரக்கணக்காய்வாங்கி ஸ்டீமர்களில் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கொண்டுவருகிறார்கள். சீமைத்தபால் நம்தேசத்திற்குக் கொண்டுவரும் பி அண்டு ஓ ஸ்டீமர் கம்பெனியார்கூட இச்சட்டைகளைவாங்கி அவர்களுடைய ஸ்டீமர்களில்வைத்து அனுப்புகிறார்களாம். இதேமாதிரியா[illegible]னேகக்கம்பெனிகள் வாங்கியிருக்கின்றன[illegible]ந்த சட்டைக

ளுக்கு கிராக்கி அதிகரிக்கவே மிஸ்டர் பாடி என்பவர் லண்டன் லிடன் ஹால் தெருவு 8-ம் கெம்பர் வீட்டில் "The Boddy" Life-Saving Jacket Co. என்று அந்தசட்டைகள் வியாபாரத்திற்காக ஒரு கம்பெனி ஏற்படுத்திவிட்டார். சட்டைக்குள் உபயோகப்படுத்தப்பட்டுவரும் மிதக்கும் நாருக்காக ஒரு பெரியகாட்டையே கிரயம் பெறுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றனர். இம்மாதிரி சட்டைகள் சென்றமாதம் தூத்துக்குடி துறைமுகத்தில் அக்கினிபகவானுக்கு ஆகாரமான டுவிங்கான் ஸ்டீமரில் வைக்கப்பட்டிருந்தால் ஸ்டீமர் தீபிடித்தவுடன் இந்த சட்டைகளைப் போட்டுக்கொண்டு எல்லோரும் சமுத்திரத்தில் குதித்திருக்கலாம். பி. ஐ. எஸ். என். கம்பெனி ஸ்டீமர்கள் அவர்களை ஏற்றிக்கொண்டு வந்திருக்ககூடும்.

Coal and Jute Shares.

நிலக்கரி சணல் பங்குகள்.

பாங்கு முறிவால் கல்கத்தாவில் நேரிட்டிருக்கும் பணகிராக்கியை முன்னிட்டு நிலக்கரி கம்பெனிகள் சணல் கம்பெனிகளின் பங்குகள் மலிந்து போயிருக்கின்றனவாம்.

A Cloth Market Destroyed.

ஜவுளிக்கடைகளில் தீப்பிடித்தது.

பம்பாயில் முல்ஜி ஜேப்தா க்ளாத் மார்க்கட் (Muljee Jaitha Cloth Market) டில் தீபிடித்து 125 சிமை ஜவுளி ஷாப்புகள் எரிந்து போய்விட்டன. சேதம் ரூ. 30 லக்ஷம் என்று கணக்கிடப்படுகிறது. காரணம் இன்னும் வெளிவரவில்லை.

An Alleged Bogus Concern.

ஒரு புரட்டு கம்பெனி.

சீனிவா[...]கவய்யங்கார் என்கிறவர் சென்னை பிராட்[...] "மதிராஸ் பிரிமியர் இன்டஸ்டிரிஸ்" என்கிற பெயர் வைத்துக்கொண்டு பங்கு ஒன்றுக்கு ரூ. 10. வீதம் பலரிடம் பங்குப் பணங்கள் சேகரித்துகொண்டு ஆனால் உண்மையில் தொழில் நடத்தும்படியான யாதொரு பிரயத்தனமும் செய்யாமல் பணம் கொடுத்து பங்கு எடுத்துக்கொண்டவர்களுக்கு ஜாப் ஜாப்பு சொல்லிகொண்டுவந்தனர். சமாசாரம் போலீஸ் கமிஷனருக்கு எட்டவே கைதி செய்யப்பட்டு ஜாமீன்பேரில் விடப்பட்டிருக்கிறார்.

ஏஜண்டுகளிடமிருந்தும் அதிகப்படியான தொகை வாங்கிக் கொண்டிருக்கிறாராம். ஆனால் யாதொரு தொழில் பிரயத்தனமும் செய்யவில்லையாம். நேஷனல் பாங்கியிலிருக்கும் வீரராகவலு நாயுடு சில பங்குகள் வாங்கியிருக்கிறார். இவர் போலிஸ் கமிஷனருக்கு அறிவிக்க, மேற்படி அய்யங்கார் கைதி செய்யப்பட்டு ஜாமீன் பேரில் விடப்பட்டிருக்கிறார். இவர் கும்பகோணவாசி. இதற்குமுன் கம்பெனிகள் ஏற்படுத்தினவர் என்று சொல்லப்படுகிறது.

Bank Director Sentenced.

பாங்கி டைரக்டர் தண்டிக்கப்பட்டார்.

அலகபாத்திலிருக்கும் பிரிடிஷ் இந்தியன் பாங்கின் மானேஜிங் டைரெக்டராகிய சிடேஷர் கோடி என்பவர் அலகாபாத் செஷன் கோர்ட்டாரால் இரண்டு வருஷ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டார். ரூ. 5000-ம் பொருமானமுள்ள கவர்ன்மெண்டு பிராம்சரி நோட்டுகள் டிரஷரராகவிருக்கும் இவரிடம் ஒப்புவிக்கப்பட்டதென்றும் அவைகளை இவர் சொந்த உபயோகப்படுத்திக்கொண்டார் என்பதும் இவர் பேரில் ருஜூப் படுத்தப் பட்ட குற்றமாகும்.

Charge against a Cashier.

ஒரு காஷ்கீப்பர்பேரில் குற்றம்.

பெங்களூர் பருத்திப்பட்டு ஆலைகம்பெனி (Banglore Woollen Cott on and Silk mills Co. Ltd.) யின் மானேஜராகவிருந்து வந்த மிஸ்டர் எம். எ. ஸ்ரீனிவாசய்யங்கார் 1910-முதல் நாளதுவரையில் ரூ. 30 ஆயிரம் கையாடிவிட்டு மறைந்து திரிகிறார் என்று ஷை ஆலையின் ஏஜண்டாயிருக்கும் மிஸ்டர் J. W. சேம்பர் மைசூர் போலிசாரிடம் பிரியாது கொடுத்திருக்கிறார். இந்த ஆலை சென்னை மெசர்ஸ்பின்னி கம்பெனியாரால் மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வருகிறது. (போலிசார் கைதி செய்து விட்டார்கள் ப-ர்)

Uniform Motor Horns.

மோட்டார் வண்டிக்கு ஒரேவிதமான ஊது குழாய்கள்.

மோட்டார்வண்டிகள், பைசிக்கில்கள், மோட்டார் பைசிக்கில்கள், மோட்டார் பைசிக்கில்கள்,— ஆகிய இந்தவண்டிகள் ஜனங்களை எச்சரிப்பதற்காக பலவிதமான எச்சரிக்கும்கருவிகளை வைத்துக்கொண்டிருக்கின்றன. சில மணி அடிக்கின்றன. சில ஊது குழாய் வைத்திருக்கின்றன. சில விநோதமான சப்தம் செய்யும் கருவிகளை வைத்துக் கொண்டிருக்கின்றன. ரோடிவ் நடக்கும் ஒருவன் ஒரு விநோதமான சப்தத்தைக்கேட்டால், அவன் அது இன்ன சப்தம் என்று தெரியாமல் சப்தம் ஜெனித்த வண்டியின் பேரிலேயே விழுந்து காயப்படுகிறான். ஆகையால் மேலே சொல்லப்பட்ட வண்டிகள் எல்லாம் ஒரேவிதமானஎச்சரிக்கைக் கருவியை வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று ஒருசட்டம் பிறப்பிக்கவும் அந்தக்கருவி இன்னதாகத் தானிருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கவும் பாரீஸ்நகரத்தில் ஒரு பிரயத்தனம் செய்யப்பட்டுவருகிறது.

Baby Cradle for the Motor Car.

மோட்டார் வண்டியில் குழந்தைத் தொட்டில்.

மோட்டார் வண்டிகளில் குழந்தைகளைத் தொட்டிலில்போட்டு கொஞ்சமேனும் அசையாமல் சுகமாய்க்கொண்டு போகும்பொருட்டு நூதனமாய் ஒரு உபாயம் கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது.

A Meat Substitute.

மாமிசத்திற்கு பதில் ஆகாரம்.

மாமிசத்திற்குப்பதிலாக சாஸ்திர ஆராய்ச்சி செய்து ஒரு ஆகாரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ருசிக்கும் பார்வைக்கும் மாமிசத்தைப் போலிருக்கிறது. ஆனால் மாமிசத்திலிருக்கும் அசுத்தங்கள் அதில் இல்லை. இதற்குப்பேர் "Regal meat" என்று சொல்லப்படும். இது பெர்மிங்ஹாமில் பிட்மான் (Pitman Health FoodCo.,283 Aston Brook Street,Birmingham என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

Vizagapatam Harbour Scheme.

விசாகப்பட்டணம் துறைமுக ஏற்பாடு.

கனம் பொருந்திய கவர்னர் லார்ட் பெண்ட்லண்டு இம்மாத ஆரம்பத்தில் விசாகப்பட்டணத்திற்குப் போயிருந்தபோது அந்த ஸ்தலத்தில் கட்ட உத்தேசித்திருக்கும் துறைமுகத்தைப்பற்றி போர்ட் ஆபீசருடனும் முனிசிபாலிடி சேர்மேனுடனும் கலந்து பேசினார்கள்.

Weights and Measure Committee.

படிகள் படிக்கற்கள் கமிட்டி.

இந்தியாமுழுதிலும் ஒரே அளவும் ஒரே நிறையுமாக விருக்கும்படி ஒரு தகுந்த ஏற்பாடு செய்யும்பொருட்டு இந்தியா கவர்ன்மெண்

டார் ஒருகமிட்டி எற்படுத்தி யிருக்கிறார்கள் என்றும் அதில் மெம்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறவர்களுடைய பெயர்களையும் "சென்னை வியாபாரியின்" முந்திய சஞ்சிகை ஒன்றில் எடுத்து யிருக்கின்றோம். இந்தக் கமிட்டியார் ஊரூராய்ச்சென்றுவிசாரணைசெய்யப்போகிறார்கள். டிசம்பர்மீ பிரயாணம் ஆரம்பித்து கோலாப்பூர், நாகப்பூர், ஜப்பல்பூர், கட்டாக் முதலிய பலவிடங்களுக்குச்சென்று பெஜவாடாவுக்கு 18-வயும் சென்னைக்கு 23-ம்வயும் வந்து சேர்ந்தார்கள்.

Sir Robert Carlyle.

ஸர் ராபர்ட் கார்லையில்.

கவர்னர் ஜெனரல் நிர்வாக சபையில் மெம்பராகவும் சென்ற மீ ஸிம்லாவில்கூடின ஐக்கிய முயற்சி இலாக்கா ரிஜிஸ்டிரார்களுடைய கான்பரென்சுக்குச் சேர்மனாகவுமிருந்த சர் ராபர்ட் கார்லையில் அவருடைய பத்தினியுடன் சென்னைக்கு நிகழ் மாதம் 17-ந்தேதி வந்து கனம் பொருந்திய கவர்னர் அவர்களுடைய விருந்தினராக சிலதின மிருந்தனர்.

COMMERCIAL CASES IN COURT.

வியாபார சம்பந்தமான கேஸ்கள்.

HIGH COURT FOURTH CRIMINAL SESSIONS.

ஐக்கோர்ட் 4-வது செஷன்ஸ்.

:(*):

குற்றவாளி—J. ஜெயவேலு முதலியார்.

கேசின் விபரம்.—குற்றவாளி சென்னை மெசர்ஸ் C. H. பார்சன் கம்பெனியில் காஷ்கீப்பர். அந்த உத்தியோக முறையில் இவரிடம் ஒப்புவிக்கப்பட்ட பணங்களில் 9-11-913-ல ரூபா 90-ம் 17-2-1913-ல் ரூபா 90-ம், 9-4-1913-ல் ரூபா 100-ம் கையாடிவிட்டார் என்று இவர் பேரில் குற்றம் சாட்டப்பட்டது.

ஜூரிகள் அபிப்பிராயம்.—7-பேர்கள் கைதி குற்றவாளி என்றும் 2-பேர்கள் குற்றவாளியல்லவென்றும் அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு.—ஜூரிகள் அபிப்பிராயத்தைக் எற்றுக்கொண்டு கோர்ட்டார் குற்றவாளிக்கு இரண்டுவருட கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். [இந்தக் கோர்ட்டில் அபராத தண்டனை விதிக்கிற வழக்கமில்லை என்று கோர்ட்டார் சொன்னார்கள்.]

Original Side.—அசல் தரப்பு.

ஜட்ஜி.—ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்.

South Indian Industrials.

சவுத் இந்தியன் இன்டஸ்டிரியல் கம்பெனியை முடிவுசெய்ய ஒரு மனு.

கேசின் விபரம்.—சவுத் இந்தியன் இன்டஸ்டிரியல் கம்பெனியை முடிவுக்கு கொண்டுவந்துவிட வேண்டுமென்று மெஸர்ஸ் ஹாஜி பக்கீர் முகமத சேட் அண்டு சன்ஸ் செய்துகொண்ட மனு சென்ற அக்டோபர் மாதத்தில் விசாரணை செய்யப்பட்டு எதிர் மனுதாரராகிய ஆனரபில் கான்பகதூர் ஹாஜி இஸ்மேல் சேட் பம்பாய்க்குச் சென்று பணம் சேகரித்து மனுதாருடைய கடனைத் தீர்த்துப்போடும் பொருட்டு டிசம்பர் மாதம் 2-ந்தேதி வரையில் வாயுதா கோர்ட்டாரால் கொடுக்கப்பட்டதென்று சென்ற அக்டோபர் மாதம் சஞ்சிகையில் எடுத்துச் சொல்லி யிருந்தோம். இப்போது டிசம்பர் மாசம் 2-ந்தேதி ஆகியும் கடன் தீர்க்கப்

படவில்லை என்றும், ஆதலால் கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று மனுதாரர்கள் மறுபடியும் கூறி சொன்னார்கள். எதிர் மனுதாரர்கள் பம்பாயில் பாங்குகள் முறிவால் தற்காலம் பணக் கஷ்டமாவாக யிருப்பதால் மனுவின் விசாரணையை இன்னும் தள்ளிவைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்,

கோர்ட்டார் உத்திரவு.—1913-14ம் வருஷத்திய பாலன்ஸ் ஷீட்டால் கடனுக்குமேல் ஐவேஜி கம்பெனிக்கிருக்கிறதென்று நன்கு விளங்குகின்றது. கம்பெனியை முடிவுசெய்ய உத்திரவு செய்தால் சொத்துகள் ஏலம் போடப்பட்டு பங்குதாரர்கள் நஷ்டமடைவார்கள். எதிர் மனுதார் பணம் சேகரிக்கும்படி இன்னும் காலம் கொடுத்தால் கடன்காரர்கள் நஷ்டமடையாமல் தங்களுடைய கடனை வசூல் செய்து கொள்ள வசதியிருக்கிறது ஆதலால் 1914 பிப்ரவரி மாசம் 14-ந் தேதி வரையில் வாயுதாவைத் தள்ளிவைக்கிறோம் என்று கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள் (3-12-1913.)

துபாஷ் தாவா.

ஜட்ஜி: ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்.

வாதி: மிஸ்டர் M. A. கொண்டைய செட்டி

பிரதி வாதிகள்: சௌத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி.

கேசின் விபரம்: வாதி, பிரதிவாதிகளுடைய கம்பெனியில் சீமை ஜவுளி துபாஷாயிருந்து அந்த வகையில் கம்பெனிக்கு நஷ்டம் நேரிட்டால் தாம் ஜவாப்புதாரியாக விருப்பதாய் ஒப்புக் கொண்டார். பிரதிவாதிகள் மெசர்ஸ் தேசி பெருமாள் செட்டி கம்பெனியோடு மாதா மாதம் நூல் பேல்கள் டெலிவர் செய்தாக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்தப்படி பிரதிவாதிகள் சப்ளை செய்யவில்லை. சரக்குகள் காலதாமதமாய் வந்தன. அதின்பேரில் மெசர்ஸ் பெருமாள் செட்டிக்கி நோட்டிஸ் பிரதிவாதிகள் கொடுத்தார்கள். பெருமாள் செட்டி எடுக்கவில்லை. ஆகவே பிரதி வாதிகள் சரக்குகளை பக்கத்தில் விற்றுப்போட்டு அதனால் உண்டான நஷ்டம் ரூ. 10,990-10 யை துபாஷின்பேரில் பத்தெழுதினார்கள், இப்படி பத்து எழுதினது வாதிக்கித் தெரியாது. தெரிந்தவுடன் வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

கேசின் நடவடிக்கை:—சில தினங்களாக விசாரணை நடந்துவந்தது.

தீர்ப்பு: ஒப்பந்தப்படி பிரதிவாதிகள் பெருமாள்செட்டி கம்பெனிக்கி சரக்கை காலாகாலத்தில் கொடுக்கவில்லை, ஆதலால் அவர்கள் சரக்கை ஒப்புக்கொள்ளவில்லை. ஆதலால் பிரதிவாதியின் அலக்ஷியமானவும் அஜாக்கிரதையான நடவடிக்கைக்காக துபாஷின்பேரில்பத்து எழுத பிரதிவாதிகள் பாத்திய மற்றவர்கள் என்று தீர்மானிக்கிறேன். ஆகவே வாதிக்கு ரூ. 5900-ம் செலவு தொகைக்கும் டிக்கிரி கொடுக்கிறேன் என்று கோர்ட்டார் தீர்ப்பு சொன்னார்கள்.

India Burama Trading Coy.,

இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனி.

டிசம்பர்மீ 5வ தினம் சின்னதம்பிமேல் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சார்ஜ்கள் உடன் கணக்கைப்புரட்டின ஒரு சார்ஜ் செய்யப்பட்டது. G. குண்டுமணிலாலா E. S. டன்ஹில், டவுராம், ஜெய நாராயணன் முதலியவர்களிடம் சரக்குகள் அடமானம் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை. பாலன் ஷீட்டிலும் காண்பிக்கப்படவில்லை. டைரக்டர்கள் கம்பெனியில் பங்கு எடுத்துக்கொள்ளாமலும்

பணம் செலுத்தாமலிருக்கும்போதே பணம் செலுத்தினதாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. கம்பெனியைச்சேர்ந்த சகல விஷயங்களும் கணக்குகளும் அவரே ஜவாப்புதாரி. அந்த கம்பெனியில் வேலையாயிருந்த வெள்ளைக்காரராகிய மிஸ்டர் கிரேயும் மற்ற குமஸ்தாக்களும் சின்னதம்பி சொன்னதைக் கேட்டவர்கள். கேஸ் நடந்து வருகிறது.

விநோதமான தீர்ப்பு.

ஜட்ஜிகள்:—ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸகாட் சிமித்,
ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ ஆக்நீ,

கேசின் விபரம்.—பஞ்சாப் மாகாணத்தில் இரண்டு ரெயில் வண்டிகள் 1911 கிரிஸட் மஸ தினம் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ள சில பிரயாணிகளுக்குக் காயம்பட்டது. சில பிரயாணிகள் இறந்துபோய்விட்டார்கள். இறந்தவர்களுள் 17 வயதுடைய சீக்கர் ஜாதி வாலிபனிருந்தான். இவன் மாணவன். கிரிஸட் மஸ பண்டிகை ரஜாவில் பெற்றோர்களைப்பார்ப்பதற்கு வந்தவன். பெற்றோர்கள் ரயில்வே கம்பெனியார் மீது நஷ்டதாவா ரூ. 17 ஆயிரத்திற்குக் கொண்டுவந்தார்கள். கீழ் கோட்டார் ரூ. 7 ஆயிரத்திற்கு ரயில்வே கம்பெனியார் மீது டிக்கிரி கொடுத்தார்கள்.

ரயில்வே கம்பெனியார் சீப் கோர்ட்டில் அப்பில் செய்துகொண்டார்கள்.

தீர்மானம்: வாலிபன் இறந்தால் பெற்றோர்களுக்கு லாபமே ஒழிய பணம் நஷ்டமில்லை என்று நியாயம் கூறித் தாவாவை அடியோடு தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

N. B. இம்மாதிரி கேசுகளில் ரயில்வே கம்பெனியின் அஜாக்கிரதைக்காக வாதிக்கி நஷ்டம் கட்டிக்கொடுக்கும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.—பத்ராதிபர்.]

மோச லாட்டரி.

கேசின் விபரம்:—மேன்மைதங்கிய வைசிராய் அவர்கள் மைசூருக்கு வந்திருந்தபோது இரண்டு வங்காளிகள் பெங்களூரில் புலப்பட்டார்கள். போலிசார் சந்தேகப்பட்டு அவர்களுடைய இருப்பிடம் முதலானவை களைக் கேட்டபோது அவர்கள் கல்கத்தாவில் ஏதோ ஒரு வியாபாரக் சம்பெனியின் ஏஜண்டுகள் என்றுசொல்ல, போலிசார் கல்கத்தா போலீஸ் கமிஷனருக்குத் தந்திகொடுத்து கேட்டதில் அப்பெயருடைய வர்த்தக கம்பெனி யாதொன்றுமில்லை என்றுபதில் தந்தி அடிக்கவே இருவரும் சந்தேகத்தின்பேரில் கைதி செய்யப்பட்டார்கள். போலீசாரின் பின்பு விசாரணையில் முதல் குற்றவாளியாகிய டே என்பவன் பர்மா ரத்ன சுரங்கங்களில் நம்பிக்கை மோசம் செய்துவிட்டு பர்மா தேசவாரண்டிற்கு தப்பி இவ்விடம் ஒடிவந்தவன் என்று தெரியவந்தது. இரண்டாவது குற்றவாளியின் பெயர் சட்டர்ஜி இருவர்களும்சேர்ந்து(Viceroy's Cup Sweep) வைசிராய் கப் ஸ்வீப் என்ற நாமங்கொண்ட ஒரு மோசமான லாட்டரி ஆபீஸ் பெங்களூரில் ரகசியமாகவைத்து நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்று தெரியவந்தது. இந்த ஆபீஸ் புஸ்தகங்கள், கடிதங்கள் டிக்கட்டுகள் முதலானவைகள் போலிசாரால் கைவசப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆகவே மைசூர் கவர்ன் மெண்டாருடைய உத்திரவின்றி ஒரு மோசடியான லாட்டரி ஆபீஸ்வைத்து நடத்தி வந்த குற்றம் ஷை இருவர்கள்பேரிலும் சாட்டப்பட்டது.

உத்திரவு:—2-வது குற்றவாளியிடமிருந்து சொந்த ஜாமீன் ரூ. 2000 மும் ரூ. 100 க்கு மேலே இரண்டு நபர் ஜாமீனும் வாங்கிக்கொண்டு விடும்படி பெஙகளூர் மாஜிஸ் டிரேட் கோர்ட்டார் செய்தார்கள். முதல் குற்றவாளி பர்மா குற்றத்திற்காக ஏற்கனவே ரிமாண்டு ஜெயிலிலிருந்து வருகிறான்.

EVENTS OF THE MONTH.

இம்மாத சம்பவங்கள்.

1௳

பிற்பகல் $2\frac{3}{4}$-மணிக்கு புதிதாக ஏற்படுத்தப்பட்ட பீகார் மாகாணத்தின் பிரதான நகராகிய பாட்னாவில் ஐக்கோர்ட்டு கூட்டமேன்மைதங்கிய வைஸிராய் அவர்கள் அஸ்திவாரக்கல் வைத்தார்கள்.

மைசூர் சமஸ்தான புதிய உடன்படிக்கை மேன்மைதங்கிய கவர்னர் அவர்களால் ஊர்ஜிதப் படுத்தப்பட்டது.

ஒருவால் நக்ஷத்திரம்.

ரால்ஸட்பர்ல் என்னும் ஊரில்தோன்றியிருக்கும் ஒரு வால்நக்ஷத்திரம் சிலோனிலிருப்பவர்களுடைய கண்ணிற்குப் புலப்படுகிறதாம். ஜனவரிமீ முதலில் சிலோனிலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலியமாப் பார்த்தால்கூட பார்க்கமுடியாதாம்.

இந்தியாமந்திரியும் இந்தியர் டெபுடேஷனும்.

லண்டனிலிருக்கும் இந்தியர்கள் லார்ட் க்ருவைக்கண்டு தென் ஆபிரிக்கா இந்தியர்கள்படும் கஷ்டங்கள் விஷயமாகக்கண்டு பேசினார்கள். அ தாபம் காட்டிப்பேசினர்; அயன் கவர்ன்மெண்டார் இதுவிஷயமாக கவலையாயிருக்கிறார்கள் என்றுசொன்னார். இது விஷயமாக ஒருவிசாரணை நடத்தப்படுவதற்கு தகுந்த காரணங்களிருக்கிறதென்று சொன்னார்.

—(:-:)—

மிருகவதை நிவாரணங்கம்.

இந்தச் சங்கத்திற்கு ராமநாதபுரம் ராஜா ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்கள். மதுரைஜில்லா ஜட்ஜி திருமங்கலத்திற்கு வந்திருந்தபோது சில வக்கீல்கள்கூடி திருமங்கலம் டி. மு. வின் ஒழுங்கீனமான நடவடிக்கைகளைப்பற்றி புகார் செய்தார்கள்.

தமிழ்சங்கம்.

வைஸ் பிரசிடெண்ட் மிஸ்டர் பி, எஸ், சுப்பிரமணிய அய்யர் இறந்துபோனதற்காக மதுரை தமிழ் சங்கமானேஜிங் கமிட்டி ஒரு மீட்டிங்குகூடி துக்கம் பாராட்டினார்கள்.

3௳

5 பேர் மாண்டார்கள்.

இரவு பெய்த $3\frac{1}{2}$ அங்குலமழையைத் தாங்கமுடியாமல் கிளைவ்ஸ் பாட்டரிக்கு எதிரிலுள்ள சென்னை கன்னிகோவில்பறச்சேரியிலிருந்த ஒரு கிடங்கு இடிந்து பக்கத்திலிருந்த இரண்டு வீடுகளின் பேரில்விழ உரங்கிக்கொண்டிருந்த 5 பேர்கள் மாண்டுபோனார்கள்.

பிரிவிகவுன்சில் அப்பீல்.

மிஸ்டரஸ் ஆனிபிசன்ட் மிஸ்டர் நாராயணய்யா இருபுத்திரர்களையும் பிதாவிடம்ஒப்புவித்துவிடவேண்டுமென்று ஐக்கோர்ட்டார் கொடுத்த தீர்ப்புக்கு விரோதமாக பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள கோர்ட்டாரால் அனுமதிகொடுக்கப்பட்டது. அதுவரையில்டிக்கிரியை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்க வேண்டுமென்று செய்து கொள்ளப்பட்ட மனுதள்ளுபடி செய்யப்பட்டது.

ஆரணி ஜாகீர்தார் கேஸ்.

சொண்டிரல் ஸ்டேஷனில் மிஸ்டர் ஜிப்சன் தாக்கினதற்காக சீப் பிரசிடெண்டு மாஜிஸ்டிரேட்டால் ரூபாய் 50 அபராதம்விதிக்கப்பட்டது.

அடிதடி கேஸ்.

பாரக்பூர் ரயில் ஸ்டேஷனில் வில்சன் என்கிற வெள்ளைக்கார டிக்கட்கலேக்ட்டர் ஒரு பெண்பிள்ளையை விபசாரத்திற்காக கொண்டு வரும்படி ஒருவாடகை வண்டிக்காரனுக்குச் சொல்ல அவன் இணங்காததால் அடியோறண்டமாக அடிக்க அவன் காயம்பட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிக்கப்பட்டான். கொழுத்த துரைக்கு ரூ. 25 அபராதம் விதிக்கப்பட்டது.

டாக்ட்டர் பட்டம்.

லாகூரில் இதற்குமுந்தி பிஷப்பாக விருந்த பி. ரெவரெண்டு ஜி. ஏ. ஃப்பரிங்குர்கு பஞ்சாப் சர்வ கலாசாலேயார் டாக்டர் என்கிற வித்வாம்சபட்டம் அளித்திருக்கிறார்கள்.

---:o:---

கூடாரம் தீக்கிறையானது.

டில்லி கவர்ன்மெண்டு காம்பில் ஒருகூடாரம் தீப்பிடித்து முழுதிலும் எரிந்து போய்விட்டது. ஒரு பாரிபட்டாள ஆபிசருடையது. அவர் தப்பித்துக்கொண்டார். ஆனல் அவருடைய சாமான்கள் சேதப்பட்டுப் போய்விட்டன.

ஒரு ஸ்டீமர் தரை தட்டிப்போனது.

"தொரசஸ்" என்கிற "ஸ்டீமர்" ஏடனில் 80 யாத்திரீகர்களோடு தரை தட்டிப்போனது.

சர்கிருஷ்ன குப்தா.

இந்தியாகவுன்சிலின் பதிவிலைவஸ்பிரசிடெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கல்கத்தா பாம்பாக்ட்டரி கேஸ்.

கல்கத்தாவில் பாம்செய்யும் தொழிற்சாலை ஒன்றுகண்டு பிடிக்கப்பட்டு பிராசிக்கியூட் செய்யப்பட்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் ஜாமீன் பேரில் விடப்படவில்லை. இந்த தொழிற்சாலை பாம்புகள் மேன்மைதங்கிய வைசிராய் பேரில் போட்டபாம்பு மாதிரியாக விருக்கிறதாம்.

பயமுறுத்தும் கடிதம்.

மிஸ்டர் சுரோதிரநாத் பனர்ஜிக்கு ஒரு வெடிக்கும் கடிதம்வந்தது. அதை அவர் போலீசுக்கு அனுப்பவே, அவர் ரூ ஆயிரம் கொடுக்க வேண்டுமென்றும் சட்டசபைகளில் மெம்பராயிருப்பதையும் விட்டுவிட வேண்டுமென்றும் இல்லே கொல்லப்படுவார் என்று ஒரு அனுமதேயக்கடிதம் வந்திருக்கிறது.

ஒருபெண் கோலே.

குண்டூர் கலேக்ட்டர் ஆபிசு காம்பவுண்டில் புல்விற்கும் ஒரு பாலியப்பெண் பலாத்கார புணர்ச்சி செய்யப்பட்டு கொலே செய்யப்பட்டிருக்கிறாள்.

யானே சேதப்படுத்தினது.

தி. பந்துதுரை பிரம்மஉற்சவத்தில் ஒரு யானே மிரண்டு கூட்டத்தில் ஓட சுமார் 30 ஜனங்கள் கீழேவிழுந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டார்கள். சுமார் ரூ. 20 ஆயிரம் ரூபாய் பெருமானமுள்ள நகைகள் திருட்டுப் போயின.

Railway Breches Repaired.

ரயில் உடைப்புகள் சரிப்படுத்தப்பட்டன.

தென்னிந்தியா இருப்புப்பாதையில் கூடலூருக்கும் கொள்ளிடத்திற்கும் மத்தியில் உண்டான உடைப்புகள் ரிப்பேர் செய்யப்பட்டு தனுஷ்கோடி மெயில் மட்டிலும் பீச்சிலிருந்து நிகழ் மாதம் 9ஆ முதல் நேரேபோய் திரும்பிவருகின்றன இப்போது எல்லாவண்டிகளும் போய் வருகின்றன.—(ப-ர்.)

8௳

பம்பாய் போலீஸ் சூப்பிரண்டு தங்கைமிஸ் எலர் இன்னும் பெண்காப்பி காய்ச்சு இரும்பு அடுப்பை பற்றவைத்துக் கொண்டிருக்கும் போது கூந்தல்மயிர் அடுப்பில்பட தீ பிடித்துக் கொண்டு தேகத்தின் பேரிலிருந்த உடுப்பு முழுதிலும் எரிந்து போய்விட்டது.

நேஷனல் காங்கிரஸ்.

கராச்சியில் கூடப்போகிற நேஷனல் காங்கிரசிற்கு மகாஜன சபையார் பிரதிநிதிகள் தெரிந் தெடுத்திருக்கிறார்கள்.

கொச்சி அரசர் கோச்சி இளவரசருக்கு பட்டம்கட்டி வைத்துவிட்டு ராஜ்ஜிய நிர்வாகவிஷயங்களைவிட்டு நீங்கி சுகவாசியாக விருக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

பாம்பன் வாராவதி.

1914 ஜனவரி௴ 1௳ திறக்கப்படும்.

இந்தியா சிலோன் இருப்புப்பாதை.

சென்னை கனம்பொருந்திய கவர்னர் அவர்களால் 1914 பிப்ரவரி௴ 24௳ திறக்கப்படும். சிலோன் கவர்னரும் விஜயம் செய்வார்கள்.

A lucture on Fisheries.

மீன்பிடிக்கும் தொழிலைப்பற்றிய உபந்நியாசம்.

கொயமுத்தூரில் கூடின சர்வ இந்தியா விவசாயக் கான்பரன்ஸ் முன்னில் வங்காளம் மீன்பிடிக்கும்கா தொழில் இலாக்கா டிப்டி டைரக்டராகிய மிஸ்டர் சவுத், வங்காளத்தில் மீன் பிடிக்கும் தொழிலைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார். இந்தப்பக்கத்தில் மீன் வியாபாரத்தைப் பலப்படுத்த வசதிகளியிருக்கின்றன வென்றும் மீன் பிடிக்கும் வகுப்பாருக்கு படிப்பு கொடுக்க வேண்டுமென்றும் ஜமீன்தார்களும் மீன் தொழிலாளிகளும்சேர்ந்து கவனித்தால் இத்தொழில்லாபகரமாயிருக்கு மென்றுசொன்னார்.

"The Madras Timies."

மதிராஸ் டைம்ஸ்.

மதிராஸ் டைம்ஸ் என்கிற பத்திரிகை கம்பெனியின் மானேஜிங் டைரக்டராகயிருந்து வந்த மிஸ்டர் வி. ருமசாமி அய்யர் நீக்கப்பட்டு அவருக்குப்பதிலாக மிஸ்டர் ஹாரி ஓமராட் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று ஷெ கம்பெனியின் டைரக்டர்கள் பத்திரிகைகளில் பயிரங்கப்படுத்தி யிருக்கிறார்கள்.

INDUSTRIES.
கைத்தொழில்.

The Madras Industrial Exhibition.
சென்னைப் பொருட் காக்ஷி.

:(*):

சென்னை பீப்பில்ஸ் பார்க் என்று வழங்கப் பட்டுவரும் சிங்காரத்தோட்டத்தில் வருஷவாரி South Indian Athletic Association என்று சொல்லும்படியான தேகப்பயிற்சி சங்கத்தார்களால் நடத்தப் பட்டுவரும் "பேர்" (Fair) வேடிக்கைகளுடன் இவ்வருடம் ஒரு பொருட்காக்ஷியும் காண்பிக்கப்பட போகிறது. என்று ஏறகனவே சொல்லியிருந்தோம்; 24-12-1913. காலை $8\frac{1}{2}$ மணிக்கி நம்முடைய லோக்கல் கவர்ன்மெண்டு செக்ரெட்டரியாகிய ஆனரபில் மிஸ்டர் பட்டர்வொர்த்தின் துரைசாணி மிசெஸ் பட்டர்வொர்த்தால் திறக்கப்பட்டது அப்போது ஆரம்பமாகவே பிரஸ்தாப பொருட்காக்ஷியும் காண்பிக்கப்பட்டு வருகிறது, பந்திய ரவுண்டு பூமியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் "மூர் பாவிலியன்" என்றுசொல்லப்படுமொளிகையின் பின் புறத்திலிருக்கும் பந்தாடும் மைதானத்தில் பிரஸ்தாப பொருட்காக்ஷிக்காக உன்னதமான ஒரு பாரிப்பந்தல் அமைக்கப்பட்டு வெகு விநோதமாகவும் சிங்காரமாகவும் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. சுமார் மதிப்பு மூன்று லக்ஷ ரூபாய்க்கு அதிகமாக பொருமானமுள்ள சாமான்கள் பல்வேறு விடங்களிலிருந்து வந்திருக்கின்றன பம்பாய் கல்கட்டா, கொழும்பு, ராஜபுதனம், பிஜப்பூர், ஜெயப்பூர், விஜயநகரம், கடூர், புதுக்கோட்டை, கோயமுத்தூர், ஈரோடு, சிக்கந்திராபாத், நாகப்பூர், மைசூர், திருவாங்கூர், முதலிய விடங்களிலிருந்து மிக வேலைப்பாடமைந்த அருமையான பொருட்கள் முன்னொரு சமயம் இந்நகரில் காங்கிரெசு மகா சபையுடன் காண்பிக்கப்பட்ட பொருட்காக்ஷிக்கு வந்தவைபோல் வந்திருக்கின்றன. ஜலம் இறைக்கும் நூதன யந்திரங்களும், விவசாய நூதன யந்திரங்களும், தளவாடங்களும், பலவகைப்பட்ட பம்புகளும், இன்ஜின்களும், கரும்பாலை, அரிசி ஆலை, எண்ணெய் ஆலை, மா ஆலை, உடுப்புகளை சலவை செய்யும் யந்திரங்கள், பின்னல் மெஷீன்கள், நெல்லறுக்கும் யந்திரங்கள் இவ்வாறு பல யந்திரங்கள் வந்திருக்கின்றன. விதம் விதமான பொட்டகிராப் உருவப்படங்களும், எண்ணெய் உருவப்படங்களும, வேலைப்பாடமைந்துள்ள மரப்பொருள்களும், சித்திரவேலைப்பாடு செய்யபப்பட்ட கருங்கல் பொருள்களும், சந்தன மரப் பொருள்களும், நேர்த்தியான தந்தப் பொருள்களும், வந்திருக்கின்றன. டாக்டர்களும், வைத்திய பண்டிதர்களும் தங்களுடைய கைகண்ட அவிழ்தங்களையும் சர்ப்பத்துகளையும் அனுப்பியிருக்கிறார்கள், பற்பொடிகளுக்கும் கூந்தல் வளர்க்கும் பரிமளத்தைலங்களுக்கு ஒரு கணக்கில்லை வகைவகையான டிரங்பெட்டிகள் அருமையான அவிகாரப்பூட்டுகள், திருடன் திறக்கமுடியாத இங்கிலீஷ் எழுத்தும் பூட்டுகளும் இரும்பு கஜானுபெட்டிகளும், வந்திருக்கின்றன. ஸ்திரீகள் கையால் சித்தரிக்கப்பட்ட மேஜைப்போர்வைகளும், யந்திரத்தாற் செய்யப்பட்ட மேஜைப் போர்வைகளும், கைவேலையினாலான கழுத்துப்பட்டிகளும் குல்லா, ஊசி வேலைப்பாடு

அமைந்துள்ள வேலைப்பாடான சாமான்களும் வந்திறங்கி யிருக்கின்றன. பத்ராஜலம் ராஜா அவர்கள் மகாவிலே உயர்ந்த நவரத்தனங்கள்வைத்து இழைக்கப்பட்ட தந்தக் கத்தி, கைப்பிரம்பு 'தந்த' விக்கிரகங்கள் முதலிய அபூர்வமானவைகளை தம்முடைய ஏஜண்டு மூலியமாக அனுப்பியிருக்கிறார்கள். இப்படியாக எண்ணிமுடியாத ஏட்டிலடங்காத ஏதேஷ்டமான சாமான்கள் வந்திருக்கின்றதைப்பார்க்க நமக்கு சந்தோஷமாயிருக்கிறது. இந்தக்காக்ஷி, கவர்ன்மெண்டு கைத்தொழில் இலாகா டைரெக்டருடைய கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டு அன்னாருடைய மேன்மைபொருந்திய உத்திரவின்பேரில் இலாக்காவின் உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் இக்காக்ஷி முயற்சியில் அனுதாபமும் கூட்டுறவும்காட்டி காக்ஷிக் கமிட்டியாருடன் கலந்துகொண்டு வேலை செய்துவருகிறதாகவும், கேள்விப்படுகிறோம். பேர் வேடிக்கை கமிட்டியார் இவ்வருஷம் மேற்படி வேடிக்கைகளுடன் ஒரு பொருட்காக்ஷி நடத்திக் காண்பிக்கவேண்டுமென்று தீர்மானித்தது, எல்லாங்கூடி, இரண்டு மூன்று மாதங்களுக்கு முந்திதான். இவ்வளவு சொற்ப காலத்திற்குள் இந்தியாவின் பல பிராந்தியங்களில் பல விடங்களிலிருந்து இப்படி ஏராளமான சாமான்கள் வந்திறங்கியிருப்பது கமிட்டியாரும் கௌரவ காரியதரிசி மிஸ்டர் வி. போதகுருசாமிப் பிள்ளை அவர்களும் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்திருக்கிறார்கள் என்றும் ஜனங்களுக்கு நன்மையைப் பயக்கக்கூடிய ஒரு பொருட்காக்ஷியைக் காண்பிக்கவேண்டுமென்று உள்ளன்பும் உற்சாகமும் உள்ளபடி கொண்டிருக்கிறார்கள் என்று "உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய்த் தெரிகின்றது. பீப்பிள்ஸ பார்க் பேர் வேடிக்கையில் சிலசமயம் கமிட்டியாருக்கும் கண்டிராக்ட்டருக்கும் ஏழாம் பொருத்தமாயிருக்கும். ஆனால் பிரஸ்தாப வருஷத்தில் கண்டிராக்ட் ஒப்புக்கொண்டிருக்கும் ஸ்ரீமான் திருவலம் ஜானகிராம் செட்டியார் அவர்கள் கமிட்டியாரும் செக்ரெட்டேரியும் அப்போதைக்கப்போது செய்யும் பிரரேபணைகளையும் சொல்லும் யோஜனைகளையும் கேட்டுக்கொண்டு இணங்கி எல்லா வேலைகளையும் கொஞ்சமேனும் சுணங்காமல் நடத்திவருவது இவ்வருட பீப்பல்ஸ் பார்க் "பேர்" வேடிக்கையின் அதிர்ஷடமும் பாக்கியமும் என்றே எண்ணப்படவேண்டும்.

நிற்க, சென்னைவிக்டோரியா மண்டபத்தில் ஆனரபில மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ் சென்ற நவம்பர் மீ மிஸ்ட்ரஸ் அனிபெசன்ட் "சுய அரசாக்ஷியும் கைத்தொழிற்களும்" என்றுதலைப் பெயரிட்டுக்கொண்டு செய்த உபந்நியாசத்தில் இந்தியாவின் பொருளாதாரம் பலப்பட வேண்டுமானால் உள்நாட்டு கைத்தொழிற்கள் பலப்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னார்; தேசவிஷயங்களைமுற்றுமுணர்ந்த இந்து பிரேமுகர்களும் அப்படியே சொல்லியிருப்பதுடன், மேன்மை தங்கிய லார்ட் ஹார்டிஞ், கனம்பொருந்திய லார்ட் கார்மிக்கல், இன்னும் சொல்லப்போனால் மாக்ஷிமைதங்கிய நம்முடையசக்ரவர்த்தியாரும் அப்படியே சொல்லியிருக்கிறார்கள். இந்த கனவான்கள் சொல்லியிருப்பதற்கு ஏற்றபடி லோக்கல் கவர்ன்மெண்டாரும் இந்தியாமந்திரியின் சாங்ஷனைப்பெற்று இம்மாகாரை கைத்தொழிற்களை அபிவிருத்தி செய்துகொண்டுபோக இவ்வருடத்தில் சர்க்கார் இலாக்கா ஏற்படுத்தியிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் கைத்தொழிற்களைப் பலப்படுத்த பலமான கிருஷிகள் செய்துவரும் இத் தரு

ணத்தில் பிரஜைகள் உபேக்ஷையாயிருக்கக் கூடாது, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். ஆதலால் ஜனங்கள், எல்லோரும் பிரஸ்தாப சிறந்த பொருட்காக்ஷியைப் போய்ப் பார்த்து பயனடைவார்கள் என்று நம்புகின்றோம்.

THE LATE JUSTICE. P. R. SUNDERAM IYER.

ஐக்கோர்ட் ஜட்ஜு பி. ஆர். சுந்தரய்யர் காலஞ்சென்றார்.

நேற்று தினம் காலை 8-மணிக்கு மதராஸ் ஐகோர்ட்டு ஜட்ஜி மிஸ்டர் சுந்தரய்யவர்கள் சிவலோகப்ராப்தி யடைந்ததைப்பற்றி மெத்தவும் விசனிக்கிறோம். அய்யரவர்கள் பாலக்காட்டில் ஒருபிராமண குடும்பத்தில் பிறந்து எர்ணாகுலம், ஸ்கூல், கள்ளிக்கோட்டை கேரள வித்யாசாலை, மதராஸ் கிருஸ்டியன் காலேஜ் இவ்விடங்களில் மாணாக்கராயிருந்து கல்வி கற்பதில் அதிக ப்ரக்யாதி அடைந்து பி. ஏ. பரிக்ஷை தேறியபின் ஐக்கோர்ட்டு வக்கிலானார். அவர்பிடித்த கேசுகளை அதிக திறமையுடனும் சாதுர்யத்துடனும் நடத்தினாரென்று பேர்வாங்கி ஏராளமான சொத்தும் சம்பாதித்தவர். சுமார் 2 வருஷங்களுக்குமுன் அவர்மதராஸ் ஐகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்பட்டு வேலையை ரொம்ப திறமையுடனும் பெருமையுடனும் பார்த்து வந்தார். சுமார் 4 மாஸமாய் அவருக்கு ஏற்கனவேயிருந்த நீரிழிவுவியாதி அதிகரித்து லீவு வாங்கிக்கொள்ளுமப்படி நேர்ந்தது. அதிதிறமையுள்ள இங்கிலீஷ் டாக்டர்களும் இந்தியவைத்தியர்களும் இயன்றமட்டும் சிகிச்சைசெய்தும் அவருக்கு வரவர பலம் குறைந்து நேற்றயதினம் இச்சம்ஸாரபந்தத்தைவிட்டு நீங்கிவிட்டார். அவருடைய பாரியைக்கும் புத்திரர்களுக்கும்நேர்ந்த இம்மகத்தான துக்கத்தை பொறுப்பதற்கு ஈசுவரன் அவர்களுக்கு தகுந்த தைரியத்தையும் பலத்தையும் கொடுப்பாராக.

MADRAS MARKET REPORT

சென்னை மார்க்கட் ரிப்போர்ட்டுகள்

Piece Goods.

சீமை ஜவுளி.

20—12—1913.

தைமாசத்தில் சம்பவிக்கப்போகிற 'பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சீட்டிகளிலும், சேலைகளிலும்மட்டக்கச்சைகளிலும் 50 × 154'' இன்சு கச்சைகளிலும் மிதமான பேரங்கள் நடந்துவருகின்றன. ஆனால் விலைகள் எல்லாம் கொள் முதலுக்கு 100-க்கு 10,100-க்கு 5 குறைத்து விற்பனை செய்யப்படுகின்றன. இப்படி பேரம் செய்யப்படுவதின் கருத்து என்னவென்றால் கையிருப்பு சரக்குகளை கரைத்துப் போட வேண்டுமென்பதே. ஸ்டாண்டர்ட் ரகங்கள் என்று சொல்லும்படியான கைபழகின ரகங்களைத்தவிர மற்றப்படி சலவை மல்லுக்காகிலும், காசாவுக்காகிலும் கோரா தோவத்திகளுக்காகிலும் விசாரணையில்லை. இவைகளின் விலையைக் குறைத்தாவது விற்பனைசெய்து கனத்த கையிருப்பைக் கறைத்துப் போடவேண்டுமென்று பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அப்படியிருந்தும் இன்னும் கையிருப்பு கறையவில்லை.

Nainsooks.

நயின் சுக்குகள்.

சில வியாபாரிகள் பணக்கசாலாவை முன்னிட்டு கொள்முதலுக்கு 100-க்கு 20,25 கம்மியாக விலை சொல்லுகிறார்கள். இதனால் மார்க்கட் கெட்டுப்போகிறது. ஆதலால் இந்த ரகத்தின் வியாபாரம் சில மாதங்கள் வரையில் முன்னுக்குவர மார்க்கமில்லை என்று எண்ணப்படுகிறது. நாளது தேதி விலை ஒரு பீஸ் ஒன்றுக்கு ரூ. 1-10-முதல் ரூ. 1-18; பணம் எதேஷ்டமாகவுடைய வியாபாரிகள் இந்த ரகங்களையும் மற்ற ரகங்களையும் குறைந்த விலைகளில் வாங்கிப்போட பிரயத்தனங்கள் செய்கிறார்கள். ஆயினும் அப்படிச் செய்யப் பயப்படுகிறார்கள் ஏன் என்றால் அவர்களுக்கு சீமை மார்க்கட்டில் நம்பிக்கையில்லை. பம்பாய், கல்கத்தா, கராச்சி முதலிய மார்க்கட்டுகள் இப்போதும் யாதொரு சரக்கும் வாங்காதபடியால், சீமைக்காரர்கள் தங்களுடைய தரிகள் எப்போதும் வேலைசெய்து கொண்டிருக்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் தாழ்ந்தவிலைகள்சொல்லுவதுமன்றி சரக்கும் தீவிரமாக அனுப்புவதாக எழுதுகிறார்கள். இந்த சமாசாரங்களைக்கேட்கும் வியாபாரிகள் பயப்படுகிறார்கள். ஆனால் கையிருப்பு சரக்கு கரையும் பரியந்தம் தற்கால நிலைமையில் மாறுதல் உண்டாவதற்கு மார்க்கமில்லாமலிருக்கிறது.

Twist and Yarn.

நூல்.

20—12—1913.

இவ்விடம் மார்க்கட் மந்தம், சீமைவிலை மிகவும் ஏறியிருக்கிறது. இவ்விடமிருக்கும் ஆசாமிகள் இன்டென்டு கொடுக்கிறதில்லை. ஏன் என்றால் பின்பு விலை இறங்கிப் போகுமென்று பயப்படுகிறார்கள். கையிலிருக்கும் சரக்கை விலை குறைத்து விற்கிறார்கள். வெளியூர்களிலிருந்து உபாயமான ஆர்டர்கள் வருகின்றன.

ஈஜிப்ட் பஞ்சால் செய்யப்பட்ட கரைநூல் தினுசு விபரம் :—

வெள்ளி.

முதல் நெ. பாவு தரம் 50 ம் நெ.

		ரூ.5 11 0	மு ரூ. 5 12 0
,,	60	ரூ.6 1 6	மு ரூ. 6 2 0
,,	70	ரூ.6 11 0	மு ரூ. 6 12 0
,,	80	ரூ.7 10 0	மு ரூ. 7 11 0
,,	90	ரூ.8 2 0	மு ரூ. 8 3 0
,,	100	ரூ.7 11 0	மு ரூ. 8 12 0

சிகப்பு.

60 ம் நெ. பாவு தரம் 1 ம் நெ.

		ரூ.8 15 0	மு ரூ. 8 12 0
,,	2	ரூ.8 12 0	மு ரூ. 8 14 0
,,	3	ரூ 8 10 0	மு ரூ. 8 12 0

Cotton.

பஞ்சு.

மார்க்கட் இன்னும் உறுதியாயிருக்கிறது. பருவகால முடிந்துபோய் விட்டபடியால் வெளியூர்களில் அனேகமாய் கையிருப்பில்லை எடுத்த புதிய வொராங்கல் இப்போதுதான் மார்க்கட்டிற்கு வந்து கொண்டிருக்கிறது. அதிகவிலை சொல்லுகிறார்கள். வாங்குகிறவர்கள் பெரும்பாலுமில்லை. இந்தியாவில் பஞ்சு விலைகுறைந்து போவதற்கு மார்க்கமிருக்கிறது. நாளது தேதி விலை :—

ஆதோனி லெட்டர்ன் ரூ. 173,800 ராத்தல்கொண்ட ஒருகண்டி.

கொட்டை எடுத்த குன்ட்ர் ரூ. 177 ஷை

புரோச் ரூ. 317 382 ராத்தல் கொண்ட

Skins and Hides.

தோல்.

20—12—1913.

மானு.—பெங்களூர் மானு வருத்து பழையபடி கம்மி. மற்ற பக்கத்து சாக்குகள் வழக்கத்துக்குக் குறையாமல் வந்துகொண்டிருக்கிறது சில பக்கத்து சரக்குகள் மழை மோடத்தினல் வர்ணம் வித்தியாசமாயுமிருக்கிறது, இதுவன்னியில் எடை அதிகமாயும், தரம் வித்தியாசமாயுமிருக்கிறது. விலை பழையபடிதானிருக்கிறது.

அயிதராபாக்கம்	0	15	0	முதல்	0	15	9
பல்லாரி	0	15	3	,,	0	15	4
ராயதுர்க்கம்	0	15	3				
ஸ்பெஷல் பெங்களூர்							
பிரைம்	0	14	6	,,	0	14	8
,, ,,	0	14	4	,,	0	14	5
,, ஆர்டினரி	0	13	9	,,	0	13	11
,, இமிடேஷன்	0	12	9	,,	0	13	8
பெல்காம்	0	14	6				
A. 1. கோஸ்ட்	0	14	8	,,	0	14	0
இராணிப்பேட்டை	0	13	6	,,	0	14	0
மட்வாடா கிளீன்	0	14	2	,,	0	14	3

யோறு—பெங்களூர் தவிர மற்ற பக்கத்து சாக்குகள் வழக்கம்போல் வருகிறது விலை 1 பை முதல் 2 பை வரையில் குறைந்திருக்கிறது.

பல்லாரி ராயதுர்க்கம்	0	11	2	முதல்	0	11	4
பெங்களூர்	0	10	9	,,	0	10	11
பெங்களூர் நடை	0	10	6	,,	0	10	8

வேறு.—டிசம்பர்மீ 8உ நடந்த வேறு எலத்தின் விபரம்.

பிரை	போன எலம்
திண்டுகல்	,,
காடா	,,

சிட்டி போன எலமுதல் ½ கம்மி விற்பனையானது 920000

தற்கால விலை.

அயிதராபாக்கம் fair					1	10	6
,, ஆர்டினரி	1	9	0		1	9	6
கோஸ்ட்	1	4	0		1	4	6
,, இமிடேஷன்	1	7	0		1	7	6

சேனு. ஏலமுதலில் 1 பென்னி ஏற்றமாயிருந்தது வரவர நடுத்தர சரக்குக்கும், காடா சரக்குக்கும் விற்பனையில் சுவாரசியத்தைக் காணோம். அமெரிக்கன் டிமாண்ட் விசேஷமாய்கிடையாது. ஏலத்துக்குப் பிறகு இவ்விடத்தில் காடா சரக்குக்கு விலை 6 பை முதல் 1 அணு வரைக்கும் குறைந்திருக்கிறதாகத் தோற்றுகிறது. போயிருக்கிற சரக்குகள் எடையான பிறகு விலை நிஷ்கரிஷையாய்த் தெரியும்.

	மங்கலம்					2	5	0
	வாணிரயபாடி					2	0	10
	ரூபதுர்க்கம்	1	14	6	முதல்	1	14	8
	பல்லாரி					1	13	6
	கோஸ்கி	1	14	3	முதல்	1	14	6
fair	அயிதராபாக்கம்	1	5	9	முதல்	1	6	0
	பட்வாடா	1	7	0	முதல்	1	7	2
fair	உள்ளூர்	1	10	6	முதல்	1	11	0
ஆர்டினரி	,,	1	4	9	முதல்	1	7	0
	கோஸ்ட்					1	4	0

உப்புவேனு. மழையினால் வருத்து வழக்கம்போவிராமல் கொஞ்சம் குறைவுபட்டிருக்கிறது. வந்தவைகளில் முக்கியமானவை கோஸ்ட். நார்த்வெஸ்ட் பிராவின்ஸ் ரங்கூன் அயிதராபாக்கத்து பக்கம்தான் ஷாப்புக்காரர்கள் விசேஷ கரீது செய்கிறபடியால் விலை குறைவதற்கேதுவில்லை. விலைகள் பழையபடி தானிருக்கிறது.

உப்பு சேனு. வருத்து நிதானம். விலை பழைய விலைக்கு ரூபாய் 2 முதல் 5 வரைக்கும் இறக்கமெனசொல்லக்கூடும்.

பட்டை, கடுக்கா. பழைய விலை.

Chillies.

மிளகாய். 15௳

மார்க்கட் மந்தம். கையிருப்பு ஏற்கனவே எதேஷ்டமாக யிருப்பதாலும் குன்ட்டூர் புதிய மாசூல் இன்னும் ஒருமாதகாலத்திற் குள்ளும் பரிமாசூல் இன்னும் இரண்டு மாதகாலங்களுக்குள் வரப்போகிறபடியாலும் விலை இறங்கிப்போகுமென்று வியாபாரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். நாளது தேதிவிலை:—

குன்ட்டூர் மிளகாய் ஒருகண்டி 8 முதல் 9 வராகன்.

பரி மிளகாய்—ஒருகண்டி 13 வராகன்.

Coriander.

கோத்தமல்லி. 15௳

மார்க்கட் மந்தம். மார்க்கட்டில் சரக்கில்லை. புதியசரக்கு இன்னும் இரண்டுமாத காலங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. நாளது தேதி விலை:—

ஒரு கண்டிக்கி $5\frac{1}{2}$ முதல் 6 வராகன்.

Turmeric.

மஞ்சள். 15௳

மார்க்கட் மிகவும் மந்தம். மார்க்கட்டில் போதுமான சரக்கிருக்கிறது. புதுச்சரக்கு வருவதற்கு இன்னும் நான்குமாதம் பிடிக்கும். ஐரோப்பாவிலிருந்து விசாரணையில்லை. 10 நாட்களுக்கு முந்தி ஒரு மார்வாரி கல்கத்தாவிற்கு ஏற்றுமதி செய்ய 500 மூட்டைகள் வாங்கினார். இதனால் கல்கத்தாவில் கிராக்கியிருப்பதாக எண்ணக்கூடாது. கமிஷன் விற்பனைக்காக அனுப்பினார். கண்டி ஒன்றுக்கு ரூ. 24 விதம் வாங்கினார். அதுதான் நாளதுதேதிவிலையும்.

METALS.
உலோகங்கள்.

Iron.
இரும்பு. 15௳

முந்திய மாத ரிப்போர்ட்டைப் பார்த்துக் கொள்ளவும். பிறகு மாறுதலில்லை.

Brass Sheets.
பித்தளைத்தகடு. 15௳

மார்க்கட் மந்தம்; சீமை விலை ஒரு மாதத்திற்கு முந்தி ஏறிக்கொண்டு போனது நிமித்தம் அவரவர்கள் லாபமடையலாமென்று எதிர்பார்த்தார்கள். இப்போது விலை நாளுக்கு நாள் இறங்கிக்கொண்டு வருவதை முன்னிட்டு கையிருப்புச் சரக்கை அவசரமாய் விற்றுக்கொண்டு வருகிறார்கள். நாளுக்குநாள் விலை இறங்கிக்கொண்டுவருகிறது. சீமைக்கு இன்டெண்டு கொடுக்க யோஜிக்கிறார்கள். நாளது தேதி விலை பாரம் ஒன்றுக்கு ரூபா 228.

———:(*):———

Copper Sheets.
செப்புத்தகடு. 15௳

நாளது தேதி விலை ரூபா 290 முதல் 292 ஆக யிருக்கிறது.

———:———

Sugar.
சர்க்கரை. 15௳

ஜாவாச் சர்க்கரை மார்க்கட் மந்தம். கையிருப்பு ஏதேஷ்டம். இத்துடன்கூட ஒன்றின் பின் ஒன்றாய் இரண்டு கப்பலில் வரவேண்டிய சரக்குகள் ஒரு வாரத்திற்கு முந்தி வந்த ஒரே ஸ்டீமரில் வந்துவிட்டதால் ஸ்டாக்கு அதிகப்பட்டு விலை இறங்கிப்போய்விட்டது. பம்பாய் கல்கட்டாவிலும் கையிருப்பு அதிகம். நாளது தேதி விலை 9 மணங்கு மூட்டை ரூபா 18—8—0.

———(:*:)———

Camphor.
கற்பூரம். 15௳

மார்க்கட் மந்தம். கையிருப்பு அதிகம் நஷ்டத்திற்கு விற்கிறார்கள்.

வில்லைச்சூடம் ஒரு பவுன் டின்	ரூபா	1-2-0
ஜப்பான் தூள் சூடம்	ரூபா	156-0-0
ஹாங்காங்	ரூபா	147-0-0

N. B. ஹாங்காங்கில் ஏஜெண்டு முறிந்து போய்விட்டபடியால் சரக்கு வருகிறதில்லை. மிஸ்டர் ஈசாபாய சேட்டிடம் மட்டிலும் சரக்கிருப்பதாக ரிப்போர்ட் செய்யப்படுகிறது.

Gunnies.
சாக்கு. 15௳

மாறுதலில்லை. முன் மாத ரிப்போர்ட்டைப் பார்க்கவும்.

Cement.
சிமிட்டி. 15௳

முந்தியமாத ரிப்போர்ட்போலவே. ஆனால் சாண்டாமிருக குறி 2 அணா விலை குறைந்து போயிருக்கிறது.

Kerosine oil.
கிரசனுயில்.

முந்திய மாத ரிப்போர்ட்டைப் பார்க்கவும்.

Mustard.
கருகு. • 15உ

மார்க்கட் அமரிக்கை. பெரிய ரகம் ஜாஸ்தி கையிருப்பு. கான்டினன்ட் கிராக்கியில்லை. இன்னும் இரண்டு மாதங்களில் புதிய சரக்கு வருகிறது. அப்போது விலை ரூ. 30-க்குத் தணிந்துபோகும். சின்ன ரகம் கையிருப்பில்லை. நாளது தேதி விலை ஒரு கண்டிக்கி ரூபா 38.

Castor-Seeds.
ஆமணக்கு. 15உ

மார்க்கட் உறுதி. உள்ளூர் ஆலைக்காரர்கள் 166 ராத்தல் கொண்ட ஒரு மூட்டைக்கு ரூபா 10-2-0 முதல் 10-3-0 வரையில் கேட்கிறார்கள். பருவகாலம் முடிந்துபோய்விட்ட படியால் அதிகச் சரக்கு கையிருப்பில்லை. புதிய சரக்கு இன்னும் இரண்டு மாதத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பா கிராக்கி கிடையாது.

Gingelly.
எள்ளு.

மார்க்கட் அமரிக்கை. புதிய சரக்கு வந்து விட்டது. கையிருப்பு எதேஷ்டம். கல்கட்டாவிற்கு ஏற்றுமதியில்லை. கான்டினன்ட்டிற்கும் ஏற்றுமதியில்லை. நாளது தேதி விலை ஒரு மூட்டைக்கு ரூபா 14-11 முதல் ரூ. 17 வரையில் விலை ஏறுமென்று தொலையில் கொள்ளுமுதல் செய்தவர்கள் எல்லாம் நினைத்தபடி லாபம் வரவில்லை என்று விசனப்படுகிறார்கள்.

Money Market.
நாணய மார்க்கட்.

சென்ற நவம்பர் மாதம் 11-ந்தேதி முதல் பம்பாய் பாங்கில் 5 வட்டி, நவம்பர் மாதம் 13-ந்தேதி முதல் வங்காள பாங்கில் 7 வட்டி, அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் மதிராஸ் பாங்கில் 6 வட்டி.

நேஷனல் பாங்க் தங்கக்கட்டி துலாம் ரூபா 24.

Madras Season Report.

சென்னை மாகாண பருவநிலை.

இந்தியாவில் எங்கு பாரத்தாலும நிரந்தரமான மழை. ஆனல் பஞ்சாபிலும் வடமேற்கு மாகாணத்திலும் மழை யின்மையால பஞ்சம் தோன்றி யிருக்கிறது சென்னை மகாணத்தில் எங்குபார்த்தாலும் நிரந்தரமானமழை ஆனல ருமஞதபுரம் ஜில்லாவில் மழை பூஜ்ஜியம். தெ. ஆற்காடு ஜில்லாவில் எறி உடைத்துக்கொண்டு கூலூருக்கும் கொள்ளிடத்திற்கும் மததியுலுள்ள இருப்புப்பாதையை அடிததுக்கொண்டு போய் ரயில்போக்கு வரத்து தடைபட்டிருக்றது. 9வ முதல் ரயில்விட ஆரம்பித்து விட்டார்கள் மறுபடியும் கடந்த வெள்ளிக்கிழமைதினம் சிதம்பரத்திற்கும் கொள்ளிடததிற்கும் மத்தியில் உடைப்புண்டானதாகவும், அந்த உடைப்பும் ரிப்பேர் செய்யப்பட்ட தென்று ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது கடந்த 4 தினங்களாக சென்னை நகரில் மழையுமில்லை மப்பு மந்தாரமுமில்லை. மலையாளத்தில் கனத்தமழை அடித்து தாம்புரபாணிந்தியில் அபாயகரமான வெள்ளப்பிரவாகம் உண்டாயிருக்கிறது. நாகப்பட்டனததிறகும் பர்ம்பனுக்கு மத்தியில சமுத்திரத்தில் புயல் அடிக்கப்போகிறதாக 4 தினங்களுக்கு முந்தி நாகப்பட்டணம் சிப் கஸ்டம ஆபிசில் அபாயக்கொடி போட்டிருந்தார்தள் நாகப்பட்டணத்தில் "பிளேக்" பிரவேசித்திருக்கிறது.

SHIPPING REPORT.

ஸ்டீமர் ரிப்போர்ட்.

சென்னை துறைமுகத்திற்கு வந்துபோகும் ஸ்டீமர்கள்.

	வருகை.					புறப்பாடு.
	பெயர்.	எஜண்டுகள்.	எத்தேச மிருந்து வருகிறது.	தேதி.		எந்த ஊருக்குப் போகிறது.
				1913		
1	ஈக்ரா ...	பின்னி	ரெங்கூன் ...	...	24	நாகப்பட்டணம் ...
2	டாரா ...	,,	ஸ்டிரேயிட்ஸ் ...	...	24	ஸ்டிரேயிட்ஸ் ...
3	சண்டா ...	,,	கல்கத்தா ...	...	24	லண்டன் ...
4	பீகம் ...	வில்ஸன்	கல்கத்தா ...	...	26	பம்பாய் ...
5	யூகன்பெல்ஸ் ...	கார்டன் வுட்ராப்	ஆன்ட்வெர்ப் ...	...	27	கல்கத்தா ...
6	மாக்பர்ஸன் ...	,,	லிவர்பூல் ...	...	28	கல்கத்தா ...
7	நேய்ரல் ...	வில்ஸன்	பம்பாய் ...	...	29	கல்கத்தா ...
8	அய்டோலா ...	பின்னி	ஆஸ்டியாலா ...	...	30	கல்கத்தா ...
9	ஆர்ஞ ...	பின்னி	லண்டன் ...	...	31	கல்கத்தா ...
11	ஸ்டிரேதிலின் ...	——	ஆன்ட்வர்ப ...	4 ஜன	25	கல்கத்தா ...
12	லெஸ்லி ...	கார்டன் வுட்ராப்	கோஸ்ட் ...	...	5	லண்டன் ...
13	கூாட்ருவல் ...	——	லண்டன் ...	...	5	கல்கத்தா ...
14	சாட்டன் ...	——	லிவர்பூல் ...	...	8	சிட்டகால் ...
15	ஸ்வார்ட்டன்பெல்ஸ்..	,,	ஆன்ட்வெர்ப் ...	...	10	கல்கத்தா ...
	ரூப்பன்பெல்ஸ் ...	,,	ஆன்ட்வெர்ப் ...		11	கல்கத்தா ...

AGRICULTURE.
விவசாயம்.

TRAINING PRACTICAL CULTIVATORS.
குடியானவர்களையும் மேஸ்திரிகளையும் பண்ணையாட்களையும் வேலையில் பழக்குதல்.

விவசாய டிபார்ட்மெண்டார் அங்கங்கே ஏற்படுத்தியிருக்கும் சர்க்கார் பண்ணைகளில் குறிப்பிட்ட எண்ணம் வரையில் தாமே பயிரிடும் குடியானவர்களையும் மேஸ்திரிகளையும், பண்ணையாட்களையும் குறிப்பிட்ட சில விவசாய வேலைகளையும், விவசாயத்திற்கு உதவும் லேசான மெஷீன்களை உபயோகிக்கவும் பழக்கிவைப்பார்கள் என்பது வெகுவாய் அநேகருக்கு தெரியாதென்று தோற்றுகிறது.

லாபமானதென்று சொல்லத்தகுந்த முறைகளை குடியானவர்கள் மனதில் படும்படி செய்வதற்கு சிறந்தவழி அவன் நிலத்திலேயே அதைச்செய்து காட்டுவதுதான். இந்தப் பிரகாரமே விவசாய டிபார்ட்மெண்டார் விசேஷமாய் செய்து வந்திருக்கிறார்கள். இனியும் அப்படியே செய்வார்கள். சிலருக்கு சர்க்கார் பண்ணைகளிலும் வேலை பழக்கித் தருவார்கள்.

சிலச்சுவான்கள் பொறுக்கி யெடுத்த சில பண்ணையாட்களை அனுப்பி அப்படி வேலை பழக்கி வைத்துக்கொள்ள இஷ்டப்படவும் கூடும். பூமிகளில் பாடுபட்டு பண்ணை வேலைகளில் பழக்க முள்ளவர்களாயும் சர்க்கார் பண்ணையிலிருக்கும் கூலிகளோடு கூலியாய் வேலைசெய்யக் கூடியவர்களாயும் இருப்பவர்களை மட்டுமே வேலை பழக்கச் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

சர்க்கார் பண்ணைகளிலிருந்து வரும்போது அதை மேல்பார்வைபார்த்துவரும் மானேஜர், அஸிஸ்டாண்டு மானேஜர் முதலியவர்களுக்கு அடங்கி நடப்பதோடு இட்டவேலைகளை சுறுசுறுப்பாயும்ஒழுங்காயும்செய்து வரவேண்டும். அப்படிச் செய்யாதுபோனால் வேலை பழக எற்பட்டகாலம் முடியுமுன்னமேயே பிரின்சிபால் துரை அவர்களாவது டிப்டி டைரெக்டர் துரை அவர்களாவது போகச் சொல்லிவிடுவார்கள்.

அவர்கள் தங்கள் செலவை அவர்களே போட்டுக்கொள்வதோடு குடியிருக்க இடமும் தேடிக்கொள்ளவேண்டும். ஆனால் அவர்கள் செய்யும் வேலைக்கு பாரத்தில் (பண்ணையில்) கூலி கொடுப்பதுபோலவே கூலிகொடுத்து விடுவார்கள். பொதுவாய் ஆயில் இன்ஜின் மோடார் (oil-engine motors) இவைகளை ஒட்டுவிக்க கற்றுக்கொடுக்கிறதில்லை. வேலை பழக்குவதைக்குறித்த விவரம் கீழேகண்டிருக்கிறது.

கோயமுத்தூர்:—உழவு; மண்ணைப்பிறட்டும் சிறுள்ள இரும்புக் கலப்பைகளை தகுந்தபடி உபயோகிக்க, ஒருமாசம் எருதுகளையும் பழக்க அனுப்பலாம்.

விதைக்கலப்பை (கொர்ருக் கலப்பை)யால் விதைக்க ஒருமாசம் ஆகஸ்டு 15 முதல் செப்டம்பர் 15 வரை.

வெல்லம் காய்ச்சுதல். ஒருமாசம் ஏப்ரல் அல்லது மே.

நெல் நாற்று நட; நாற்றங்கால் தயார்செய்து நாற்றுப்பாவி ஒற்றை நாற்றாய் நடவும் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்யவும். இரண்டுமாசம் ஏப்ரல் முதல் ஜூலை வரை.

ஆண்பிள்ளை ஆட்களோடு அவர்கள்வீட்டுப் பெண்பிள்ளை ஆட்கள் வந்தால் ஒற்றை நாற்று நடவும் தூற்றுகிற மெஷீன் வேலையும் பழக்குவார்கள்.

ஹகரி (பல்லாரிஜில்லா):—ஏரங்காடு என்று சொல்லும் கரிசல் நிலத்துக்கேற்ற இரும்புக் கலப்பைகளைக் கொண்டு உழப்பழகல். இரண்டு மாதம் ஜனவரி பிப்ரவரி.

சோளத்திற்கு கரிப்பான் நோய் வாராதபடி சோளவிதையைப் பாடம் செய்ய. எக்காலத்திலும் அது தெரிகிறமட்டும்.

நந்தியால் (கர்நூல் ஜில்லா)—ஹகரிக்குச் சொன்னபடியே.

சாமலாகோட்டா (கோதாவரி ஜில்லா).—நெல் நாற்றங்கால் தயார் செய்து நாற்றுப் பாவி பிடுங்கி ஒற்றை நாற்றாய் நடவும் பசுந்தாளுரப் பயிர்களை சாகுபடி செய்யவும், மூன்று மாதம். மே, ஜூன், ஜூலை.

கரும்பு வெல்லம் செய்யவும் கரும்பை வரிசையாய் நட்டு பயிரிடும் முறையைப் பழகவும். இரண்டு மாதம் பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை.

பாலூர் (தென்னாற்காடு ஜில்லா).—(1) விதை பொருக்கி எடுத்தல். ஒருவாரம் ஆகஸ்டு செப்டம்பர்.

(2) சிந்திக் கலப்பையால் உழுதல், சாம்ஸன் ஆரம் என்று சொல்லும் முள்ளுப் பலுகால் பலுகடித்தல். ஜனவரி பிப்ரவரி மாசங்களில் ஜூன் ஜூலை மாசங்களில் ஒருவாரம்.

(3) கரும்புநடல்—மார்ச்சில் 2 வாரம்.

கோயில்பட்டி, (திருநெல்வேலி ஜில்லா).—(1) கரிசல் கலப்பை என்று சொல்லும் இரும்புக் கலப்பையை சரியானபடி பூட்டவும் உழவும் பழக கோடையில் அதாவது மே ஜூலை மாசங்களில் இரண்டு வாரம்.

(2) கொர்ரு கலப்பை, விதைப்புக் கேற்ற கருவிகளை உபயோகப்படுத்திப் பழக, செப்டம்பர், அக்டோபர் மாசங்களில் ஒரு மாசம்.

(3) மாட்டுக் களைவெட்டியால் களைவெட்ட (அதாவது தர்துலடிக்க). டிசம்பர், ஜனவரி மாசங்களில் இரண்டுவாரம்.

தளிப்பரம்ப (மலையாள ஜில்லா).—கரும்பு ஆலை ஆடி வெல்லம் காய்ச்சும் முறைகளைப் பழக. இப்போதே ஆலை அடுப்புக் கட்டும் விதத்தையும் பழக்குவார்கள். ஜனவரியில் ஒரு மாசம்.

Cuban Sugarcane.
குபான் கரும்பு.

இவ்வருஷம் இதற்குமுன் விளைந்த கரும்புகளை விட ஏராளமான கரும்பு விளைவாம். குபான் என்னுமிடத்தில் 2,429,200 டன் விளைவெனக் கருதப்படுகிறது, இது மற்ற வருஷங்களைவிட 500,000 டன் அதிகமென்று ஹவானாவிலிருந்து வந்த தந்தி கூறுகிறது.

—(:o:)—

Agricultural Loans.
விவசாயிகளுக்கு கடன் உதவி.

சென்ற மாரி காலத்தில் மிட்நாப்பூரில் நேரிட்ட வெள்ளச் சேதத்தை முன்னிட்டு கஷ்டப்படும் கிரிஷிகனுக்கு கடன்கொடுத்து உதவிசெய்யும் பொருட்டு வங்காள கவர்ன்மெண்டார் ரூபா 1,24,000-ம் சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

***

தென் ஆற்காடு ஜில்லாவில் வீராநத்தம் ஏரி உடைந்து போனதை முன்னிட்டும் அதிக மழையாலும் கால்நடைச் சேதமும் பயிர்ச்சேதமும் உண்டாயிருப்பதால் இதே மாதிரியாக உதவி கவர்ன்மெண்டார் முன்வந்து செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென் ஆற்காடு ஜில்லா கலெக்டர் இப்போது வெள்ளத்தால் சேதப்பட்ட ஸ்தலங்களைப்போய் பார்வையிட்டு வருகின்றனர்.

Secretary to the Rev. Settlement
ரேவினியூ செட்டில்மேண்டு இலாக்கா காரியதரிசி.

ராவ்பகதூர் டி. ராகவய்யா பந்துலு அவர்கள் ரெவினியூ செட்டில்மெண்டு இலாக்கா காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Cotton Gin.
பஞ்சு கோட்டை எடுக்கும் யந்திரம்.

விருத்திசெய்யப்பட்ட ஒரு யந்திரம் கண்டுபிடித்து பேட்டண்ட் செய்யப்பட்டிருக்கிறது. கண்டுபிடித்தவர் பம்பாய் மாரயன் தெருவு 9-ம் நெம்பர் வீட்டிலிருக்கும் மிஸ்டர் எவ். ஆர். ஸ்டார்ட்டன்.

All India Agricultural Conference.
சர்வ இந்தியா விவசாய கான்பரன்ஸ்.

8-வது வருஷத்தியக் கூட்டம் நிகழ் மாஸம் 8-ம் தேதி கோயமுத்தூரில் நடத்தப்பட்டது. விவசாய விஷயங்களைப் பற்றி இந்தியா கவர்ன்மெண்டிற்கு யோஜனை சொல்லுபவராகிய மிஸ்டர் ஜே. மாக்கண்ணு சபாநாயகரா யிருந்தனர். சபாநாபகர் பிரசங்கத்தில் மற்ற விஷயங்களுடன் கரும்புசாகுபடியைப் பற்றியும், ஐக்கிய முயற்சி மூலியமாக விவசாயத்தை எப்படி விருத்தி செய்யலாமென்பதும், வெண்ணெய் சாலைகள் ஏற்படுத்துவதைக் குறித்தும் சொல்லப்பட்டிருந்தன.

CASTRATION AND MULLING.
விதை எடுத்தலும் விதை அடித்தலும்.

ஆண் மிருகங்கள் பொலிய லாயக்கில்லாது போய் இனத்தை பெருக்காமலிருக்கும்பொருட்டு இந்த சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. விதை எடுத்தல் என்றால் மிருகங்களின் பீஜங்களையே எடுத்துப் போடுவது. அதில் கைதேர்ந்தவர்களல்லாதவர்கள் அதைச் செய்ய எத்தனிக்கலாகாது.

காயடித்தல் அல்லது விதை அடித்தல் என்பது விதையையாவது இந்த்ரிய நாடியை (விதைக்கொடி) யாவது அல்லது இரண்டையுமாவது எடுத்துப் போடாமல் அழித்து ப்ராணிகளை பொலிய சக்தியில்லாமல் செய்தலாம். விதையடித்தல் (காயடித்தல்) என்னும் கொடிய செய்கை எல்லாருக்குமே தெரிந்திருக்குமாதலால் அது செய்யும் விதத்தைக் குறித்து விரித்துச் சொல்லவேண்டியதிராது. இந்த தேசத்

தில் க்ராமாந்தரங்களில் செய்து வருவது எப்படி என்றால் விதை கூழாய்ப் போகும்வரை அதை அடித்து நசுக்கி இளக்கி விடுகிறார்கள் என்றே சொல்லலாம்! இது செய்ய ஏறக்குறைய அரைமணி பிடிக்கும். அது ஆரம்பித்து முடிகிறவரையில் அந்த ப்ராணியானது பொறுக்க முடியாத வேதனைப் பட்டுக்கொண்டேயிருக்கும். ம்ருகங்களை வசக்கி மனிதனுக்கு வேண்டிய வேலைகளை செய்விக்க வேண்டுமானால் இப்படியேதாவ தொன்றைச் செய்துதான் தீரவேண்டுமென்பதை கவனிக்க வேண்டும், சென்ற சில வருஷங்களுக்கு முன் சாஸ்த்ரப்படி விதை எடுக்கத் தெரிந்தவர்கள் ஏதோ சில பெரிய பட்டணங்களில் தவிர மற்றெங்கும் கிடையாது. அந்தக் காலத்தில் விதை அடிக்க கொஞ்சம் ந்யாயம் இருக்கத்தான் இருந்தது. ஜில்லா ஜில்லாவுக்கு மற்ற விஷயங்களில் பயிற்சி யிருப்பதுபோல "விதை எடுப்பதிலும்" பயிர்ச்சி உள்ள கால்நடை வைத்யர் ஒருவரையாவது ஸர்க்காரில் நியமித்திருக்கும் இக்காலத்தில் நாகரீகமடைந்த தேசத்திலிருப்பவர்கள் கால்நடைகளைக் "காயடிக்க" விட்டுக்கொண்டிருப்பது மிகவும் இழிவு விதையடிப்பதை விட்டு "விதை எடுத்தலினால்" உண்டாகும் முக்யமான நன்மைகள் கீழே சுருக்கமாய் குறிக்கப்பட்டிருக்கின்றன.

(1) விதையடிக்க அரைமணி செல்லும். விதை எடுக்கமட்டும் என்றால் கைப்பழக்கமுள்ள ஒருவருக்கு 5 நிமிஷத்துக்குமேல் பிடியாது.

(2) குதிரைகளுக்கு, குட்டியாயிருக்கும்போது விதை எடுப்பதனால் 14 நாளில் நன்றாய் வாசியாய் விடும். மற்ற மாடு ஆடானால் விதை எடுத்த உடனே மந்தையில் பற்றி விட்டு விடலாம். பின்பு அதைப்பற்றி கவனிக்க வேண்டியதேயில்லை. விதை அடித்த வேதனை தீர்ந்து வாசியாக அநேக வாரம் செல்லும். அநேக ஸமயங்களில் காயடித்த இடத்தில் கட்டி உண்டாவதும் உண்டு.

(3) பீஜங்களை அடியோடு எடுத்துவிடுவதால் பின் அந்த பிராணிகள் பொலிய சற்றும் லாயக்கில்லாமல் போகுமென்பது தெளிவாய் விளங்குகிறது. இந்த நோக்கத்தோடு காயடித்தபோதிலும் ப்ராணிகள் படும் துயரத்தைப் பார்த்து சற்று முந்தியே விட்டு விடுவதால் நமது உத்தேசம் சில ஸமயங்களில் நிறைவேறுகிறதில்லை அப்போது அது ஸரியானபடி பொலிய முடியாதுபோனாலும் (கடிளக்காய் கிடப்பதால்) காமம் இருந்துகொண்டு பருவத்திலிருக்கும் பெட்டைகளை வீணில் அலைக்கழித்துக்கொண்டு அதுள்ளளவும் எல்லாருக்கும் பெருந்தொல்லையாயிருந்து வரும்.

(4) இந்த சிகித்ஸை சீக்ரத்தில் முடிந்து போகிறதினால் இந்த தேசத்தில் விதை எடுக்கப்போகும் ப்ராணிகளுக்கு மயக்கந்தா க்ளோரபாரம் என்னும் மருந்து கொடுக்கிறதில்லை. இருந்தாலும் உடையவர்கள் விரும்புகிறபக்ஷத்தில் கால்நடை வைத்யர் அந்தப்படி செய்வார். அப்போது அந்த ம்ருகங்களுக்கு சற்றும் வருத்தம் தோற்றாது போகும். இரண்டு வயஸாகிறவரையில் ம்ருகங்களுக்கு காயெடுக்கவாவது காயடிக்கவாவது கூடாதென்று ஒரு தப்பெண்ணம் இத்தேசத்திலிருந்து வருகிறது. அநேக சமயங்களில் 3 அல்லது 4 வயஸு வரை காயடிக்கிறதில்லை. இளமையில் காயடித்தால் வளர்ச்சி குன்றிப்போகுமென்று குடியானவர்கள் சொல்லுகிறார்கள். உண்மையில் எப்படி ஆகிறதென்றால் காயடியாத காளை கழுத்துப்புறமும் திமில்புறமும் கனத்து லக்ஷணமில்லாமல் போகிறது இளமையில் காயெடுத்துவிட்டால் தேகத்தின் முன்பக்கம் பருப்பதற்கு போகும் ஸத்து நாலா பக்கமும் ஸமமாய்ப் பரவி அது உயர்ந்து வளர்ந்து வயஸு வரும்போது ஸாதுவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

குடித்தனத்துக்குரிய ம்ருகங்களுக்கு காயெடுக்க வேண்டிய வயஸுகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

குதிரை கழுதைகளுக்கு	......1 முதல் 2 வயஸு
மாடு ...	... 3 மாதம் முதல் 1 வருஷம்.
ஆடு, வெள்ளாடு	...1 முதல் 3 மாதம்.

முன் சொல்லியபடி ப்ரதி ஜில்லாவுக்கும் ஒரு கால்நடை வைத்யரையாவது நியமித்திருக்கிறார்கள். அவரைத் தாலூக்காவுக்கு ஒரு மாஸமாக தனக்கேற்பட்டிருக்கும் தாலூக்காக்கள்தோறும் சுற்றி வரத் திட்டம் செய்திருக்கிறார்கள். அவர் 4 முதல் 6 மாசத்திற்கு ஒருதடவை ஒவ்வொரு தாலூக்காவுக்கும் வருவார், எந்த க்ராமத்துக்காவது விதை எடுக்க வேண்டிய சால் நடைகளிருந்தால் தாலூக்கா தாசில்தாருக்கு எழுதிக்கொள்ளவேண்டியது. அவர் கால்நடை வைத்யரை அந்த க்ராமத்திற்குப்போக எழுதி விடுவார்..

(:o:)

CO-OPERATION.

ஐக்கியமுயற்சி.

M. G. S. CO-OPERATIVE SOCIETY LIMITED.

மதிராஸ் சர்க்கார் உத்தியோகஸ்தர் ஐக்கிய நாணய சங்கம்.

சென்னப்பட்டணத்தில் வரும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய நன்மைக்காக ஒரு ஐக்கிய நாணய சங்கம் சென்ற 1912 செப்டம்பர் மீ 7உ ரிஜிஸ்டர் செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது. இது ரெவினியூ போர்ட் செட்டில்மெண்டு இலாக்காவின் உத்தியோகஸ்தர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பவும் இந்த இலாகா உத்தியோகஸ்தர்கள் தான் பெரும்பாலும் மெம்பர்களாயிருப்பதுமன்றி பங்குகளும் விசேஷமாக அவர்களே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐக்கிய முயற்சி வருடம் சென்ற ஜூன் மீ 30உயுடன் முடிந்துபோய் விட்டதால் இதன் முதல் வருஷாந்திரக் கொண்டாட்டம் திருவல்லிக்கேணி கெல்லட் ஹாலில் சென்ற நவம்பர் மீ 29உ நடத்தப்பட்டது. சர். வி. சி. தேசிக்காச்சாரியார் முதலான மெம்பர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். இவ் ஐக்கிய முயற்சி சங்கத்தின் பிரசிடெண்டாகிய ஆனரபில் மிஸ்டர் ஆர். ஸி. கார் சேர்மேனாகயிருந்தார். சென்ற வருஷத்திய ரிப்போர்ட் வாசிக்கப்பட்டதைக் கொண்டு அடியிற்கண்ட விஷயங்களை நாம் வெளிப்படுத்துகின்றோம். சென்றவருஷத்தில் இச் சங்கம் 9 மாதங்கள்தான் வேலை செய்தது. என் என்றால் செப்டம்பர் மீ 7உ இச்சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட போதிலும் 20உ வரையில் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. அதன் பிறகும் இரண்டொரு மாதங்கள் வரையில் ஒழுங்கான வேலை நடக்கவில்லை. ஆயினும் இதில் 587 மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் 3943 பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 111 பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கும் 14 மெம்பர்கள் வெளியூருக்கு மாற்றப்பட்டுப் போய்விட்டார்கள். 10 பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கும் ஒரு மெம்பர் உத்தியோகத்தைவிட்டு நீங்கி பென்ஷன் பெற்றுக் கொண்டு நின்றுவிட்டார். மெம்பர்களுக்குள் பெரும்பாலும் டிபாசிட் போடுகிறவர்களில்லை. ஆயினும் 18 பேர்கள் மட்டிலும் டிபாசிட் போட்டார்கள். அதுவும் ரூ. 1500க்கு மேல் டிபாசிட்டு ஒருவரும் போடவில்லை. 12 பேர்கள் ஒவ்வொருவரும் ரூ. 100ம் ரூ. 100க்குச் குறைவாகவும் டிபாசிட் போட்டார்கள். இதனால் மெம்பர்கள் மீர்க்கக்கூடிய பணம் சொற்பமாகயிருந்தபோதிலும் தங்களுடைய சங்கத்திலேயே போட்டுவைக்க வேண்டுமென்று விருப்பமுடையவர்களாக விருக்கிறார்கள் என்று நன்குவிளங்குகின்றது. 295 மெம்பர்களுக்கு ரூ. 23,196 சென்ற வருடம் கடன் கொடுக்கப்பட்டது. இந்த கடன்கள் எல்லாம் மேலொப்பத்தின்பேரிலும், போஸ்டல் லயிப் இன்சூரன்ஸ் போஸ்டல் எண்டோவ்மெண்டு, (Postal life Insurance and Postal Endowment) பாலிசிகளின்பேரில் கொடுக்கப்பட்டன. ஸ்தாபர சொத்து அடமானத்தின்பேரில் சென்ற வருஷம் யாதொரு கடனும் கொடுக்கப்படவில்லை. சென்ற வருஷம் நாம் எற்கனவே சொல்லியபடி இச்சங்கம் 9 மாதங்கள் வேலைசெய்திருந்த போதிலும் ரூ 1040-11-11 வந்திருக்கிறது. இதில் நானகில் ஒரு பாகம் ரூ. 260-3-0 பிரத்தியேக நிதியில்(Reserve Fund) சேர்க்கும்படி ரிஜிஸ்டிரார் உத்திரவு செய்திருக்கிறார். மெம்பர்கள் சென்ற வருஷம் ஆரம்ப வருடமாயிருந்தபடியால் தங்களுக்கு லாபத்தை பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டியதில்லை என்றும் ரிசர்ப் நிதியுடன் சேர்க்கும்படி தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் கடன் வாங்கின பணத்தை வாயுதா தவறாமல் ஒழுங்காய்க் கொடுத்தவர்களுக்கு, செலுத்தப்பட்ட தொகைக்கு ரூபாய்க்கு ஒருதம்பிடிவீதம் இனாம கொடுக்கும்படி தீர்மானித்திருக்கிறார்கள். மெம்பர்கள் கடன்வாங்கின பணத்தை மாசத்தவணையாகசிறுகச்சிறுகச்செலுத்துவதால் இச்சங்கத்தின் நன்மையை வெகுவாய் உணர்ந்துவருகிறார்கள். ஆரம்பத்தில் இச்சங்கத்தில் 3000-ம் பங்குகளுக்குத் தான் எற்பாடு செய்யப்பட்டது. இதின்பிறகு 5000ம் பங்குகளாக உயர்த்தப்பட்டன. இப்போது எறக்குறைய 4 ஆயிரம் பங்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டுப் போய்விட்டபடியால் மொத்தப் பங்குகளை பதினாயிரமாக உயர்த்திவிட்டார்கள். இன்னொரு சந்தோஷகரமான விஷயம் என்னவென்றால் இச்சங்கம் யாதொரு கடனும் வாங்கவில்லை. ஆனால் ரூ. 23000 கடன் கொடுத்திருக்கிறது.

ரெவினியூ போர்ட் செட்டில்மெண்டு இலாக்கா உத்தியோகஸ்தர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் சென்னப்பட்டணத்தில் உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு கனத்த நன்மையைச் செய்துவருகிறது. இரத்தத்தை உறுஞ்சும் பூச்சிகளைப்போலொத்த மார்வாடிகள் கையில் சிக்கி சீர்குலையாமல் சென்னை

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அற்ப வட்டிக்கி கடன் வாங்கி சிலாசிலாவாக மாதத்தவணையில் செலுத்திக் கொண்டுவருகிறார்கள். இப்பேர்ப்பட்ட ஒருசங்கமிருப்பது பெரும்பாலும் மற்ற கவர்ன்மெண்டு ஆபிசுகளுக்குத் தெரியாமலிருப்பது பரிதாபகரமா யிருக்கிறது!

PROGRESS OF THE CO-OPERATIVE MOVEMENT IN MADRAS DURING 1912—13.

1912–13–ல் இம்மாகாணத்தின் ஐக்கிய முயற்சி அபிவிருத்தி.

இந்தியாவிலிருக்கும் எல்லா மாகாண ரிஜிஸ்டிரார்களும் ஸிம்லாவில் கான்பரன்ஸ் கூடினார்கள் என்று சென்றமாத சென்னை வியாபாரியில் சொல்லியிருந்தோமல்லவா? அந்த கான்பரன்சில் அந்த அந்த மாகாண ரிஜிஸ்டிரார் அவரவருடைய மாகாணத்தின் ஐக்கிய இயக்கயபிவிருத்தியைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய மாகாண ரிஜிஸ்டிராராகிய திவான் பகதூர் எல். டி. சாமிகண்ணு பிள்ளை அவர்கள் சென்னை மாகாணத்தில் உண்டாயிருக்கும் அபிவிருத்தியைப் பற்றி பேசினார்கள். அதிலிருந்து அடியிற்கண்ட விஷயங்களும் கணக்கும் புலப்படுகின்றன. 1912–13-ல் சென்னை ராஜதானியில்.—

11–சென்டிரல் சங்கங்களும், 1008 விவசாயப் பற்றுடைய சங்கங்களும், 59 விவசாயப் பற்றற்ற சங்கங்களும், ஆக மொத்தம் 1,078 சங்கங்களிருந்தன. மெம்பர்கள்.— சென்டிரலில் 940, விவசாயப் பற்றுடைய சங்கங்களில் 64037, அற்ற சங்கங்களில் 17,841 ஆக 82,818 மெம்பர்களிருந்தார்கள். மெம்பர்களல்லாதவர்களிட மிருந்து வாங்கின கடன் ரூபா 4,69,503 மற்ற சங்கங்களிடமிருந்து வாங்கின கடன் ரூபா 41,35,121, பங்கு மூலதனம் ரூபா 9,73,944; மெம்பர்கள் கட்டின டிபாசிட் ரூபா 19,39,721; சர்க்கார் உதவி ரூபா 30,460; ரிசர்வ்நிதி ரூபா 32,722 ஆக மொத்தம் ரூபா 95,81,471.

செலவு,

மெம்பர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்ட டிபாசிட் தொகை ரூபா 30,53,708, மெம்பர்களல்லாதவர்களுக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்ட தொகை ரூ. 30,12,721 மற்ற சங்கங்களுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 6,88,542 மெம்பர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் ரூபா 33,52,195, மற்ற சங்கங்களுக்கு ரூபா 18,76,490. கடன்கள்பேரிலும் டிபாசிட் பேரிலும் கொடுக்கப்பட்ட வட்டி ரூ 471,198 கொடுக்கப்பட்ட டிவிடெண்டும் போனசும் ரூ. 38 437, சிப்பந்திச் செலவு வகையறு ரூபா 44,638, சில்லரைச் செலவுகள் ரூ. 12,65,217, ஆகமொத்தம் ரூபா 1,38,33,146.

முந்திய வருஷத்துடன் சீர் தூக்கி பார்த்தல்.

1912-13–ல் 6 ஆக விருந்தது 7-ஆனது யூனியன்கள் 3 ஆக விருந்தது 4. சென்டிரல் பாங்கியிலிருந்த மெம்பர்களின் எண்ணிக்கை 643-லிருந்து 835-க்கு ஏறியிருக்கிறது. யூனியனுக்கு அடக்கமாயிருந்த சங்கங்களின் எண்ணிக்கை 60-லிருந்து 93-க்கு ஏறி யிருக்கிறது. விவசாயப்பற்று அற்ற சங்கங்கள் 47 (13,507 மெம்பர்கள்) ஆக விருந்தது 59 (17,841 மெம்பர்கள்) ஆயிருக்கிறது. விவசாயப் பற்றுடைய சங்கங்கள் 916 (52,006 மெம்பர்கள்) ஆகவிருந்தது 1008 ஆக ஏறியிருக்கிறது. செங்கற்பட்டில்தான் ஏதேஷ்டமான சங்கங்களிருக்கின்றன. அதாவது 193 அதற்கடுத்தபடி அநந்தப்பூர் ஜில்லாவில் 148 சங்கங்களிருக்கின்றன. சங்கங்கள் மிகவும் குறைந்து போயிருக்கும் ஜில்லாக்கள் பெல்லாரி, கெஞ்சம் முறையே 3–சங்கங்களை உடைத்தாயிருக்கின்றன.

மூன்று தானிய பாங்குகளும், உபாத்தியாயர்களுக்காக 3-சங்கங்கள், சென்னப்பட்டணம் சால்ட் கொட்டாரத்தில் வேலை செய்யும் கூலிக்காரர்களுக்காக ஒரு சங்கம், சேலம் முனிசிபாலிடி தோட்டிகளுக்காக ஒரு சங்கம்—ஆகிய இச் சங்கங்கள் இவ்வருடத்தில் நூதனமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 5 ஜில்லா கான்பரன்சும் இவ்வருஷம் நடத்தப்பட்டன. சென்ற வருடம் 376 புதிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது இவ்வருடம் 106 சங்கங்கள்தான் ஸ்தாபிக்கப்பட்டன. காரணம் என்னவென்றால் பழைய சங்கங்கள் ஒழுங்காய் நடைபெற்று வருகின்றனவா என்றுகவனிக்கப் பட்டுவந்தது.

A TALUK CO-OPERATIVE CONFERENCE.

தாலூக்கா ஐக்கிய சங்க கான்பரன்ஸ்.

காஞ்சீவரம், சைதாப்பேட்டை, திருவள்ளூர் ஆகிய இந்த தாலூக்கர்களுக்காக நிகழ் மாஸம் 18, 192-ளில் ஒரு தாலூக்கா கான்பரன்ஸ் கிளச்சேரியில் நடத்தப்பட்டது. செங்கற்பட்டு கலெக்டராகிய மிஸ்டர் P. S. P. ரயிஸ் I. C. S. சபாநாயகரா யிருந்தனர்.

WORKMEN'S CO-OPERATION.

சென்னைப்பட்டினத்தில் வேலைக்காரர்களின் ஓர் ஐக்கிய முயற்சிச் சங்கம்.

(கோவாப்பரேடிவ் புல்லட்டீனுக்கு ஒருவரால் எழுதப்பட்டது.)

நாம் தினந்தோறும் உட்கொள்ளும் உப்பு சர்க்கார் உத்திரவின் கீழ் தயார் செய்யப்படுவது யாவரு மறிந்தவிஷயமே! ஆனால் அது விசாலமான உப்பளத்திலிருந்து ஏழைக் குடிகளுக்கு வருவதற்குமுன், எவ்வளவு ஏழை ஜனங்கள் பிழைக்கிறார்களென்றும், எத்தனை தனிகர்களுக்குப் பணம் மேல் மேல் ஓங்குவதென்றும் சிறுபான்மையோர்தாம் அறிவார்கள். இந்த இராஜதானியில் அநேக இடங்களில் உப்பு செய்கிறார்கள். சென்னையினருகிலுள்ள என்னூர் கோவிலோன் என்னுமிடங்களில் உப்புப்பாத்திகளிருக்கின்றன.

அநேக நூற்றுக்கணக்கான ஏழைஜனங்கள், உப்பளங்களில் வேலை செய்தும், உப்புப்பாத்திகளை தயார்செய்தும், நல்ல உப்புகள் குறித்த காலத்தில் படியும்படியாக அவைகளில் சமுத்திர ஜலத்தைப் பாய்ச்சியும், பிறகு அவ்வுப்புகளைக் கூட்டிச் சேர்த்தும், தினந்தோறும் தங்கள் ஏழைவயிற்றை வளர்க்கிறார்கள்,

இந்த உப்பளங்களிலிருந்து உப்புகள் 'பக்கிங்ஹாம் கால்வாயிற் (Backingham Canal) செல்லும் படகுகள் மூலமாய் 'ஸால்ட்கொட்டார்ஸ்' என்று சொல்லப்பட்ட சென்னை உப்புடிப்போவைச் சேருகின்றன. அந்த படகுக்காரர்கள் இந்தவேலை செய்து எளிமையாய் வசிக்கிறார்கள். சர்க்காரிடத்தில், கூலி விஷயமாய் எவ்வளவு அதிக ரேட்டு வாங்க முடியுமோ அவ்வளவும் வாங்கி இந்த ஏழைப் படகுக்காரர்களுக்கு எவ்வளவு குறைந்த கூலி கொடுக்க முடியுமோ அவ்வளவும் கொடுக்கக் கூடிய பணப்பழக்கமுள்ள கண்டிராக்டர்களின் கஷ்டமான உழைப்பால், அக்கண்டிராக்டர்கள் தங்கள் செல்வத்தை அபிவிருத்தி செய்கிறார்கள். படகுகள் நிரம்ப உப்பு ஏற்றப்பட்டு வந்தவுடன், அதை இறக்கவும், கொட்டாரில் மூடியிருக்கும் குவியல்களைப்போல் சேர்க்கவும் நூற்றுக்கணக்காண கூலிகள் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். சர்க்கார் தரபில் இந்த வேலைகளை தாங்கள் உள்ளூர்ந்து பார்ப்பது அசாத்தியமானதால், கண்டிராக்டில் ஏற்பட்ட ரேட்டுபடி வேலையை விட்டுவிடு

கிறார்கள். கண்டிராக்ட்டர்கள், இவ்விதமாய் உள்ளே பிரவேசித்துப் பணம் சம்பாதிக்க, அச்சம்பாத்தியத்திற்குக் காரணமான கூலிகளோ தங்கள் தின காலக்ஷேபத்தை கஷ்டப்பட்டு நடத்திக்கொண்டு பரிதாபமான நிலையிலிருக்கிறார்கள். அந்த உப்புக் குவியல்களை ஒரு வருஷத்திற்குக் குறையாமல் இருந்தவிடத்தில் இருக்கச்செய்து பிறகு உள்ளூர் வியாபாரிகளுக்காவது, அல்லது கப்பலேற்றி வெளியிடங்களுக்காவது அனுப்புகிறார்கள். இப்பொழுதும், சாக்குகளில் உப்புகளை நிரப்பவும், அவைகளை ரயில் வண்டியில் அடுக்கவும் அல்லது வியாபாரி வண்டிகளுக்குச் சுமக்கவும் கூலிகள்' என்று சில சமயங்களில் இழிவாய்க் கூப்பிடப்பட்ட வேலைக்காரர்களின், உதவி வேண்டியிருக்கிறது. இந்த வேலையிலும், கண்டிராக்ட்டர்கள் சில ரேட்டுகள் படி வேலையை முடிப்பதாக ஸர்க்காருடன் ஒப்பந்தம்பண்ணிக்கொண்டு வேலைக்காரர்களுக்கு நாளொன்றுக்கு அணு 8, 10, 12, அல்லது சில சமயத்தில் 14 வீதம் கொடுக்கிறார்கள். இந்த உப்புகளை முதலில் பெரிய வியாபாரிகளிடம் விற்கிறார்கள். இவர்களிடமிருந்து சில்லரைக்கடை வியாபாரிகள் மறுபடி வாங்கி நமக்குக் கொடுக்கிறார்கள்.

இவ்விதமாய், உப்பு உண்டாக்குவதிலும், படகுகளில் ஏற்றிக்கொண்டு போவதிலும், உப்பு டிப்போவில் அதை இறக்குவதிலும், மறுபடி வியாபாரிகளுக்கு அதைக் கட்டி அநுப்புவதிலும் அதை விற்பதிலும், ஆகிய ஐந்து வழிகளில், தரகுக்காரர்கள் தலையிடுகிறார்கள். உப்பளத்தில் வேலை செய்யும் ஆட்களும், உப்பைச் சுமந்து ஏற்றும் வேலைக்காரர்களும், படகுக்காரர்களும் அல்லது சிறு வியாபாரிகளும் ஒன்று சேர்ந்து இந்தத் தரகுக்காரர்களை உள்ளே நுழையவிடாமற் செய்யலாம். ஏரல் கிரே (Earl Gray) என்பவர் சமீபத்திற் செய்த உபந்யாசத்தில் வற்புறுத்தினபடி அநாவசியமான தரகுக்காரர்களை விலக்குவதுதான் ஐக்கிய முயற்சியின் உண்மையான வேலை. இவ்வேழை வேலைக்காரர்களுக்கு ஐக்கிய முயற்சியின் நன்மையைக் கொடுக்கவேண்டும். ஆனால் இவர்களுக்கு ஒன்றும் தெரியாததினால் ஆரம்பத்தில் உத்தியோகஸ்தர்கள் பார்வையின் கீழ் இவர்களின் பொருட்டு ஒரு சங்கம் ஏற்பட வேண்டும்.

ஸர்க்காரிலேயே இவ்வழியில் ஏற்பாடு எடுத்துக்கொண்டுவிட்டதாகக் கேட்க நான் சந்தோஷப்படுகிறேன். ஒரு ஐக்கிய முயற்சிச் சங்கம் சென்னையில் உப்பு டிப்போவில் வேலை செய்யும் வேலைக்காரர்களின் நன்மைக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சங்கமானது சில ரேட்டுகளுக்கு உப்பை ரயில் வண்டிக்குச் சுமக்கவும் அல்லது உள்ளூர் வியாபாரி வண்டிகளில் அதைப் போடவும் சம்மதித்திருக்கிறது. சர்க்காருக்குக் கட்ட வேண்டிய ஜாமீன் பணம் கட்டியாய் விட்டது. அதிலுள்ள மெம்பர்கள் ஒவ்வொருவரும் சங்கத்தின் கடனுக்கு முழுவதும் பொறுப்புள்ளவர்களா யிருக்கிறார்கள். மெம்பர்கள் தினந்தோறும் உப்பை ஏற்றுகிறார்கள். ஆனால் சங்கம் இரண்டு வாரத்திற் கொருதரம் பில்லைக் காட்டிப் பணம் வாங்கிக்கொள்ளுகிறது.

வேலைக்காரர்கள் தங்களுக்குள்ள ஏற்பாட்டின்படி தினந்தோறும் கூலி பெற்றுக் கொள்ளுகிறார்கள். இப்பொழுது ஒவ்வொருவரும் முன்பு, கண்டிராக்டரிடத்தில் சம்பளம் வாங்கினதைக்காட்டிலும் 2 அணு அதிகமாய் அடைகிறார்களென்று அறிகிறேன். அவர்கள் கணக்குகள் எழுத ஒரு குமாஸ்தாவையும் கூலிவேலையைப் பகிர்ந்து கொடுக்க ஒரு மேஸ்திரியையும் நியமித்திருக்கிறார்கள். இவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். வேலைக்காரர்களுக்கும் இவர்களுக்கும் கொடுத்

தது போக பாக்கித் தேறினது சங்கத்தின் ஆதாயமாகும். ஆதாயத்தைப் பிரிக்கும் விதமும் நிர்வகிக்கும் முறைகளும் சங்கத்தின் 25-லிருந்து 34—வரையிலுள்ள அநுபந்த விதிகளில் விபரமாய்ச் சொல்லப்படுகின்றன. சிலவற்றை இங்கு கூறுகிறேன்.

கூலிவேலை காண்ட்ராக்ட்.

25. ரிஜிஸ்டராரவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட கூலிவேலை கண்ட்ராக்டர்கள்தான் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

26. சங்கத்தின் எல்லா மெம்பர்களும் வேலைக்கு ஒழுங்காய் ஆஜராக வேண்டியது. எந்த மெம்பரும் பஞ்சயத்தாரிடம் லீவ்கேட்காமல் வேலையினின்றும் நின்றுவிடக் கூடாது. யாராவது ஒரு மெம்பர் குறித்த ஒரு நாளில் வேலைக்கு வராமலிருந்தால், டெம்பரரியாக எத்தனை கூலிகள் வேண்டுமோ, அத்தனை கூலிகளை, மார்க்கட்டு ரேட்டின்படி சேர்க்க அதிகாரமுண்டு. அப்படி இதனால் நேரிடும் நஷ்டத்தை வேலைக்கு வராமல் நின்ற மெம்பரிடம் வசூல் செய்யப்படும். இப்படி ஒருவன் 2 வாரத்திற்கு மேல் தவறி நடந்து, பஞ்சாயத்தாருக்கும் சரியான முகாந்தரம் கொடுக்காவிட்டால் மெம்பர்கள் ஜாப்தாவினின்றும் அவன் பெயரை பஞ்சாயத்தார் எடுத்து விடுவதோடு அந்த மெம்பர் ஸ்தானத்திற்கு வேறொருவரை ஏற்பாடு செய்யவாவது அல்லது கூலிவேலை கண்டிராக்ட்டை நிறைவேற்ற டெம்பரரியாய்க் கூலிகளைச் சேர்க்கவாவது, அதிகாரமுண்டு.

27. வருஷத்திற் கொருமுறை கூலியாட்கள் ஒவ்வொருவருக்கும் அவருடைய வேலையின் தாரதம்மியப்படி, எவ்வளவு கூலி கொடுக்கலாமென்று நிர்ணயஞ்செய்ய பஞ்சாயத்தாருக்கு அதிகாரமுண்டு. இப்பொழுது வழங்கும் கூலிரேட்டை ஊர்ஜிதப்படுத்த, முன்பு கண்டிராக்ட்டர்களால் கொடுக்கப்பட்ட ரேட்டு உதவியாயிருக்கும். கூலிரேட்டுகள் ஒருதரம் உறுதி செய்யப்பட்டால், ரெஜிஸ்ட்ராரவர்கள் சாங்க்ஷனின்றி அவ்வருஷத்திற்குள் அவைகள் மாற்றப்படக்கூடாது.

30. சங்கத்தில் வேலைசெய்யும் குமாஸ்தா அல்லது குமாஸதாக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கக்கூடிய லாபத்தில் 100-க்கு 2-வீதத்திற்கு மேற்படாமல் வெகுமதி கொடுக்கப்படும்.

31. செக்ரிடெரி, குமாஸ்தாக்கள் உதவியைக்கொண்டு, பிரசிடெண்டு அன்றன்றைக்குக் கொடுக்கவேண்டிய கூலியை மெம்பர்களுக்கு அல்லது அவர்களுக்கு பதிலாய் வருபவர்களுக்கு, பட்வாடா செய்வார்.

32. சங்கம் ஏற்றுக்கொண்ட கண்டிராக்ட்டுக்காக, கவர்ன்மெண்டாரால் அல்லது வேறு ஏதாவது பொதுக்கூட்டத்தால், அல்லது ப்ரைவேட் மனிதன் அல்லது மனிதர்களாற் செலுத்தவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ள பிரசிடெண்டுக்கு அதிகாரமுண்டு.

CO-OPERATION IN PUNJAB.

பஞ்சாபில் ஐக்கிய இயக்கம்.

பஞ்சாப் மாகாணத்தில் அனேக ஐக்கிய விவசாயச் சங்கங்களிருக்கின்றன. இவைகளுக்கு வேலை செய்யும் மூலதனம் 80லக்ஷத்திற்குமேலிருக்கிறது மத்திய பாங்குகளுக்கும் யூனியன்களுக்கும் 28 லக்ஷ ரூபாய்க்குமேலிருக்கிறது. சென்ற வருடத்தில் 100-க்கு 45 பேர்கள் புதிய மெம்பர்கள் சேர்ந்தார்கள். மூலதனம் 100க்கு 72 வீதம் விருத்தி அடைந்தது. இந்தியாவிலிருக்கும் மற்ற மாகாணங்களைவிட பஞ்சாபில்தான் அதிகப்படியான ஐக்கிய விவசாய சங்கங்களிருக்கின்றன. பணம் கொடுக்கும் வகுப்பார் இந்த முயற்சியை எதிர்த்துக்கொண்டு வருகிறார்கள் என்பதில் தடையில்லை. ஆயினும் அவர்களையும் இம்முயற்சியில் சேர்த்து விடுவதற்கு லெப்டினண்ட் கவர்னர் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள்.

—(:-:)—